விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 | மார்கழி 6 | ராபி ஆகி 8 | இதழ் 314
யாழ்ப்பாணம் | சனிக்கிழமை | 21-12-1985

## தொண்டமானறு சம்பவம்: பொதுமக்கள் அச்சம்!

(யாழ்ப்பாணம்)

தொண்டமனாறு, வல்வெட்டித்துறை பகுதிகளில் நேற்றுக் காலை ஆயுதப்படையினரின் நடமாட்டத்தால் பதற்றநிலை ஏற்பட்டது. மக்கள் அச்சத்துடன் காணப்பட்டனர்.

நேற்று முன்தினம் இரவு தொண்டமனாறுப் பகுதியில் கைக்குண்டு வீச்சு சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

ஆயுதப்படையினர் நேற்றுக்காலை லொறியில் நீண்ட குழாய்கள் பொருத்தப்பட்ட இயந்திரத் துப்பாக்கியால் சுட்டதாகவும் இரு செம்மறி ஆடுகள் மாத்திரம்இறந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து சில மணிநேரம் கடைகள் மூடப்பட்டிருந்தன. வாகனங்கள் பொதுமக்களின் நடமாட்டம் இன்றி வீதிகள் வெறிச்சோடின.

கவசவாகனங்கள் லொறிகள் மத்தியில் நடைபவனியாகப் பொலிகண்டி ஊடாக ஆயுதப் படையினர் சென்றுகொண்டிருந்தனர். ஹெலிகொப்டர்களும் தாளப் பறந்து சென்றன. துப்பாக்கிச்சூட்டுச் சத்தங்களும் கேட்டன.

நேற்றுப் பிற்பகல் மீண்டும் வாகனங்கள் இப்பகுதியில் நடமாடத் தொடங்கின. [மா]

● கொழும்புத்துறையில் நேற்று ஏற்பட்ட பதற்றநிலை!

# 5 ஹெலிகொப்டர் சுற்றிவளைத்து தேடுதல் வேட்டை!

# இருவர் பலி! இரு பெண்கள் காயம்!!

(அலுவலக நிருபர்கள்)

**யாழ். மாநகர எல்லைக்குள் அமைந்த ஒரு பகுதியை இதுவரை நடைபெற்றிராதவகையில் ஐந்து ஹெலிகொப்டரிலிருந்து திடீர் திடீர் என குதித்த இராணுவத்தினர் முற்றுகையிட்டு மிகப்பெரும் தீவிர தேடுதல்வேட்டையில் நேற்றுப் பிற்பகல் பூராவும் ஈடுபட்டிருந்தனர். இச்சம்பவம் நகர மக்களை பெரும் அதிர்ச்சியடையச் செய்தது.**

கொழும்புத்துறை யோகர் சுவாமிகள் ஆச்சிரமத்தை உள்ளடக்கிய பகுதியே இந்த நிர்க்கதிக்குள்ளானது.

இராணுவத்தினரின் தேடுதல் நடவடிக்கையின்போது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இரு இளைஞர்கள் பலியானர்கள் வீட்டிலிருந்த இரு அப்பாவிப்பெண்கள் படுகாயமடைந்தனர்.

ஹெலிகொப்டர்களிலிருந்தும், தரையிலிருந்தும் தொடர்ச்சியாக துப்பாக்கி வேட்டுகள் தீர்ந்தவண்ணமிருந்தன. பல வீட்டுக்கூரைகள் சேதமடைந்துள்ளன. மக்கள் அல்லோலகல்லோலப்பட்டு வீடுகளுக்குள் பதுங்கிக் கொண்டனர். சில வீடுகளில் அவலக் குரல்கள் ஒலித்தன.

பழனி இந்திரன் (16 வயது), ஆசீர்வாதம் ஆகிய இரு இளைஞர்களுமே பலியானவர்கள் ஆவர்.

ஜீவதாம்பாள் சுப்பிரமணிய ஐயர் (48வயது, ரஞ்சிதமலர் சுப்பிரமணியம் (17 வயது) ஆகிய இரு பெண்கள் படுகாயமடைந்தனர். இவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

நேற்று நண்பகல் ஒரு மணியளவில் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்துக்கும் கொட்டுக்கிணற்றடிப் பிள்ளையார் கோவிலுக்குமிடையிலுள்ள வெளியில் திடீர் திடீர் என நான்கு ஹெலிகொப்டர்கள் வந்து தரை இறங்கின. அச்சமயம் மேலே ஒரு ஹெலிகொப்டர் வட்டமிட்டுப் பறந்தவண்ணமிருந்தது.

ஹலிகொப்டர்களிலிருந்து திடுதிப்பெனக் குதித்த இராணுவத்தினர் அச்சூழலிலுள்ள வீடுகளுக்குள் புகுந்து சோத

[8-ம் பக்கம் பார்க்க]

## பொலிஸ் ஜீப் மீது குண்டுவீச்சு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரிலுள்ள அரசடி எனும் இடத்தில் இரகசியப் பொலிஸார் சென்றுகொண்டிருந்த ஜீப் மீது கைக்குண்டு வீசப்பட்டதைத் தொடர்ந்து மட்டக்களப்பு நகர் நேற்றுக்காலை வெறிச்சோடிக்காணப்பட்டது!

கைக்குண்டு வீசப்பட்டதில் எவரும் காயமடையவில்லை என்று கூறப்படுகிறது.

பொலிஸ் அதிரடிப்படையினர் மட்டக்களப்பு, ஊறணி, மயிலம்பாவழி ஆகிய இடங்களில் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தினர்கள்.

ஊறணிப்பகுதியில் 7 பேர் கைது செய்யப்பட்டனர்.

## சுவரொட்டி அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

வவனியா முகாமில் படுகொலைசெய்யப்பட்ட பன்னீர்ச்செல்வன் அரவிந்தன் ஆகிய தமது தோழர்களுக்கு முதலாம் ஆண்டு நினைவஞ்சலியை தமிழ்ஈழ இராணுவம் செலுத்துவதாக யாழ்ப்பாணமெங்கும் சுவரொட்டிகள் காணப்படுகின்றன. [ஐ]

# தமிழ் இளைஞர்கள் பிரச்னை: சுவிஸ் அதிகாரிகள் திருப்தி?

(யாழ்ப்பாணம்)

தமிழ்மக்கள் எதிர்நோக்கியிருக்கும் பல்வேறு பிரச்னைகள் குறித்தும் நேரில் அறிந்துகொள்ளும்பொருட்டு யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த சுவிற்சர்லாந்து அரசாங்கத்தின் உயர்மட்டக்குழு நேற்று மாலை கொழும்பு திரும்பியது.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்த போது பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, ஆகிய பகுதிகளுக்கும் சென்று வடபகுதி தமிழ் இளைஞர்களுக்கு ஏற்பட்டிருக்கும். பிரச்னைகள் பற்றிய அண்மை நிலையைத்தெரிந்துகொண்டதுடன் திருப்தியும் அடைந்ததாக சுவிஸ் தூதுக்குழுவினருடன் நெருங்கிய தொடர்புள்ளவர்கள் நேற்று 'ஈழநாடு'வுக்குத் தெரிவித்தனர்.

## தொண்டமான் சந்திப்பு

[கொழும்பு]

இலங்கைக்கு விஜயம் செய்திருந்த சுவிஸ்நீதியமைச்சைச் சேர்ந்த குழுவினர் கடந்த புதன்கிழமை கிராமிய தொழில்துறை அமைச்சர் திரு. எஸ். தொண்டமானைச் சந்தித்தனர்.

## ராஜீவுக்கு குமரிஅனந்தன் கோரிக்கை

[சென்னை]

''சகல உரிமைகளுடனும் வாழ இலங்கைத் தமிழர்களுக்கு அனைத்து உதவிகளையும் இந்திய அரசு செய்யவேண்டும்'' என்று காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் தலைவர் திரு. குமரி அனந்தன் கூறியுள்ளார்.

சென்னையில் நிருபர்கள் மத்தியில் நேற்று பேசிய திரு. அனந்தன்; இதனை உறுதிப்படுத்தும் வகையில் பம்பாயில் நடைபெறும் அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டில் தீர்மானம் எடுக்கப்படவேண்டும் என்று தாம் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் கூறினர். [ரா]

சுவிற்சர்லாந்திலுள்ள இலங்கை தமிழ் அகதிகளின் விவகாரம் குறித்து இவர்கள் பேச்சு நடத்தியிக்கலாம் என நம்பப்படுகிறது.

# "தமிழ் இளைஞர்கள் சித்திரவதைக்குள்ளாகி சீரழிந்தனர்!

### அன்னையர் முன்னணி மகஜர் மூலம் விளக்கம்

[கா. யோகநாதன்]

''சுவிற்சர்லாந்தில் அகதி முகாம்களில் உள்ள எங்கள் பிள்ளைகளுக்கு தொழில் பயிற்சி அளித்திர்களானல், இந்நாட்டில். ஓர் தீர்வு ஏற்பட்டபின்னர் அவர்கள் இங்கு வந்து தங்கள் எதிர்காலத்தில் வேலைவாய்ப்புப் பெறுவதற்கும் சுயதொழில்களில் ஈடுபடுவதற்கும் பெரும் உதவியாக இருக்கும்.''

யாழ். அசோக் ஹோட்டலில் சுவிஸ் குழுவினரை நேற்று முன்தினம் அன்னையர் முன்னணி சந்தித்தபோது மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தனர்.

அன்னையர் முன்னணி சார்பில் முன்னணி இணைச்செயலாளர் திருமதி பாலசிங்கம், திருமதி இராசரத்தினம், திருமதி சிவகுமார், திருமதி லலிதா புறாடி ஆகியோர் இடம்பெற்றனர்.

அன்னையர்முன்னணியார் தங்களை அறிமுகம் செய்தபோது சுவிஸ் குழுவினர் ''உங்களைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கிறோம்'' என்று தெரிவித்தனர்.

சுவிஸிலுள்ள சுமார் 4500 தமிழ் அகதிகளை இலங்கைக்கு அனுப்புவது பற்றிய யோசனையை மறுபரிசீலனை செய்யுமாறு அன்னையர் முன்னணியினர் கேட்டுக்கொண்டனர்.

1974ம் ஆண்டு இந்த அரசு பதவிக்கு வந்தபின்னர்தான் தமிழ்மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனரென்றும், தமிழ் மக்கள் குறிப்பாக இளைஞர்கள்

(5-ம் பக்கம் பார்க்க)

# "அரசியல் தீர்வு காணும்வரை தமிழ் இளைஞர்களை அனுப்பாதீர்!"

### யாழ். பிரஜைகள் குழு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

''சுவிற்சர்லாந்தில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள இலங்கைத் தமிழ் இளைஞர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்ப வேண்டாம்'' என்று யாழ்.பிரஜைகள் குழு, சுவிற்சர்லாந்து அரசாங்கத்தைக் கேட்டுள்ளது,

யாழ்.பிரஜைகள் குழுவின் சார்பில் அதன் செயலாளரான சட்டத்தரணி திரு. ஆர். பாலசுப்பிரமணியம் இலங்கையிலுள்ள சுவிஸ் ஸ்தானிகருக்கு அனுப்பி வைத்த ஒரு மகஜரில்; இந்த இளைஞர்கள் தென் இலங்கைக்கு அனுப்பப்படும் பட்சத்தில் எதிர்நோக்கும்

[5-ம் பக்கம் பார்க்க]

## 'உயிருக்கு அஞ்சியே தூரஇடம்ஓடினர்'

''எங்கள் மூதாதையர்கள் பல நூற்றாண்டு காலமாக பாதுகாப்புடனும், அமைதியுடனும் வாழ்ந்துவந்த எங்கள் சொந்த இடத்தில் தற்போது பாதுகாப்பில்லை, நாட்டின் வேறு எந்தப் பகுதியில் வாழ்வதும், சொந்தப் பகுதியிலும் பார்க்க பாதுகாப்பு இல்லை. அதனால்தான் பலர் வெளிநாடு செல்கிறார்கள். அப்படியானவர்களை தென்னிலங்கையில் குடியமர்த்தும் யோசனை பாரதூரமானவிளைவுகளை ஏற்படுத்தும் என்பது

(5-ம் பக்கம் பார்க்க)

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

கிறசர்க் கற்கள், தீராந்தி, பலகை வகைகள் சகாய விலையில் விற்பனைக்குண்டு. சகுந்தலாதேவி மெற்றல் வேக்ஸ், குரும்பசிட்டி, தெல்லிப்பழை. [2504]

பலவர்ணத்தில் லவ் பேட்ஸ் பறவைகள் பெற்றுக்கொள்ளலாம். இடம்: கந்தசாமி அன் சன் நல்லூர், மார்கட் சந்தி. [2514]

(கற்பூர மெசின்) கற்பூர வில்லைகள் தயாரிக்கும் இயந்திரம் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: 188, புதுச் செட்டித் தெரு, கொட்டாஞ்சேனை, கொழும்பு-13. [2479]

வலம்புரி சங்கு: உயர்ஜாதி வலம்புரிச் சங்கு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஆயர்பாடி, மடத்தடி, கே. கே. எஸ். வீதி, தெல்லிப்பழை. [2454]

குளிர்சாதனப்பெட்டி, வீட்டுத் தளபாடங்கள், சாப்பாட்டுமேசைகள், கதிரைகள், கட்டில்கள், அலுமாரிகள், செட்டிகள், வெளிநாட்டுக் கிளாஸ் வகைகள், இங்கிலீஸ் பாத்திரங்கள், டினர்செட்கள், பாவித்த இரும்பு கேட் ஆகியன உடன் விற்பனைக்குண்டு. சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் ஆனந்தன், கொக்குவில் மேற்கு, ஆடியபாதம் வீதியில் உள்ள சந்திரா சலூனுக்கு பக்கத்திலுள்ள சாந்தினி இல்லத்தில் பார்வையிடலாம். [2474]

திருநெல்வேலி கறுப்பின கத்தரிக் கண்டு விற்பனைக்குண்டு. மு. குமாரசாமி, அராலி மேற்கு, வட்டுக்கோட்டை. [2501]

Bairaha Farms புரொயிலர் குஞ்சுகள், Nel Farm சேவற் குஞ்சுகள் 24ந் திகதி செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும். பதிவு செய்க, சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். [247?]

Made in England 2 அந்தர் எடையுள்ள புதிய கொம்புப் பட்டடை (Anvil) பாவித்த புடிச்சிராவியும் விற்பனைக்கு உண்டு. (இல. 27, புங்கன்குளம் வீதி, யாழ்ப்பாணம்.) தொடர்பு: திரு. சி. பாக்கியநாதன், ஈஸ்வரன் கருச், 179, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். [2482]

அல்சேசன் நாய்க்குட்டிகள் (Pure bread Alsation), குளிர்சாதனப் பெட்டிகள், தளபாடங்கள், தையல் மெசின், துவிச்சக்கர வண்டி (Chopper), கஸற் றேடியோக்கள், கலர் T. V., மருத்துவப் புத்தகங்கள், கம்பளங்கள், துணிவகைகள், வெளிநாட்டு கிளாஸ் வகைகள், மற்றும் பலபொருட்கள் விற்பனைக்குண்டு. சி. பத்மநாதன், C/o திரு. அம்பலவாணர், திருநெல்வேலி வடக்கு, (திருநெல்வேலிச் சந்திக்கும் மருத்துவக் கல்லூரிக்கும் இடையில் உள்ளது). [2494]

## விற்பனைக்கு

அரசாங்கத்தால் சிபார்சு பெற்ற விதை மிளகாய்க் கன்றுகள் MI I, MI II விற்பனைக்குண்டு. M. இராசநாயகம், பலாலி றோட், கோண்டாவில் கிழக்கு. (2507)

## தேவை

எமது ஸ்தாபனத்திற்கு English Typing, Accounts ஆகியனவற்றில் அனுபவம் வாய்ந்தவரும் யாழ். மாநகர சபைக்குள் வசிப்பவரும், 25 வயதுக்குட்பட்டவருமாகிய பெண் காசாளர் பதவிக்குத் தேவை. உடன் சொந்தக் கையெழுத்தில் ஆங்கிலத்தில் விண்ணப்பிக்கவும். Globe Industries, 173, 4-th Cross Street, Jaffna. [2486]

ஆங்கிலத் தட்டச்சு அனுபவமுள்ள லிகிதர் உடனே தேவை. ஆண், பெண் இருபாலாரும் 30-12-85க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 2447, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [2447]

கிறைண்டர் மில்லில் வேலை செய்வதற்கு அனுபவமுள்ள ஆள் தேவை. தொடர்பு கொள்ளவும்: Trufood Grinders, 41, Kanthappasegaram Lane, (ஹரன் சினிமா அருகாமையில்), யாழ்ப்பாணம். [2469]

சைவ-அசைவ உணவு சமையல் வேலைகளில் அனுபவம் உள்ள, நற்குண, நல்லொழுக்கமுடைய ஐம்பது வயதான ஒருவர் கண்ணியமான ஓர் இடத்தில் வேலையை எதிர்பார்க்கிறார். விளம்பர இல. 2524, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [2524]

I. C. M. A. பாகம் B பாடத் தொகுப்பு உடனடியாகத்தேவை. விளம்பர இல. 2472, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [2472]

## வாடகைக்கு

பண்டத்தரிப்பு நவீன சந்தைக்கு முன்பாக இரண்டு பெரிய கடைகள் தளபாடங்கள், ரெலிபோன் வசதியுடன் வாடகைக்குக் கொடுக்கப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி; M. H. ஜேந்திரன், சண்டிலிப்பாய் வீதி, பண்டத்தரிப்பு. [2477]

## தவறிவிட்டது

அடையாள அட்டை இல. 45086086V, பாஸ்போட் இல. 0028209, சாரதி லைசென்ஸ் இல. 003953 என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ந. யோகராசா, குரும்பசிட்டி, தெல்லிப்பழை என்ற விலாசத்தில் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். [2515]

## அராலி வடக்கில் உதைபந்தாட்டச் சுற்று போட்டிகள்

[யாழ்ப்பாணம்]

அராலி வடக்கு சில்வர் ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழக ஆதரவில் அமரர் இ. கணேசலிங்கம் ஞாபகார்த்த சுழற் கேடயத்திற்கான 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் இன்று சனிக்கிழமை முதல் ஆரம்பமாகின்றன.

யாழ் மாவட்டத்திலுள்ள 23 பிரபல கழகங்கள் பங்குபற்றும் இப் போட்டிகள் அராலி வடக்கு சில்வர் ஸ்ரார் விளையாட்டு கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன. இறுதியாட்டம் ஜனவரி 5 ம் திகதி ஞாயிறு மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. வெற்றி பெறும் கழகத்திற்கு பெறுமதி மிக்க பரிசுகள் வழங்கப்படவுள்ளன இதற்கான ஏற்பாடுகளை செயலாளர் திரு. நா. நடன சண்முகநாதன் தலைமையிலான செயற்குழு ஏற்பாடு செய்துள்ளது.

## மலிவு விற்பனை

விற்று தீர்ப்பதற்காக உள்நாட்டு வெளிநாட்டு ஜவுளி வகைகள் மலிவு விலையில் விற்பனையாகிக் கொண்டு இருக்கின்றன. 31-12-85 வரை மட்டுமே,
வனஜா ரெக்ஸ்ரையில்ஸ்,
144, மொடேர்ன் மாக்கற்,
யாழ்ப்பாணம். [2512]

## M. Sc. COURSE IN PLANT PHYSIOLOGY AND HORTICULTURE

Reference to the earlier advertisement of this course, persons with a General Degree of a recognised University or any other equivalent qualifications and a good performance in the relevant subject for the degree may also apply.

Those who have already applied in response to our earlier advertisement of 20-09-1985 need not apply again. The relevant forms can be obtained from the Assitant Registrar, Academic Branch, University of Jaffna.
2527

## அறிவித்தல்

### கிளிநொச்சிப் புதிய சந்தை

கிளிநொச்சி பழைய சந்தையில் பாதிக்கப்பட்ட மாதாந்த வாடகைக் கடைக்காரர்கள் அனைவருக்கும் புதிய சந்தையில் எதிர்வரும் 23-12-85ம் திகதி திங்கட்கிழமை காலை 10-00 மணிக்கு இடம் காட்டப்படும். சம்பந்தப்பட்டவர்கள் குறிப்பிட்ட தினத்தில் சமூகமளித்து இடத்தைப் பாரமெடுக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

**ந. பாலசுப்பிரமணியம்,**
அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்,
உள்ளூராட்சி நிருவாகசேவை.
யாழ்ப்பாணம்
அபிவிருத்திச் சபை,
கிளிநொச்சி உப அலுவலகம்,
கிளிநொச்சி.
1985-12-19. [2525]

## புலிகளின் சுவரொட்டி

(வவனியா)

'தமிழீழ விடுதலைப் புலிகள், தமது சகதோழர்கள் மூவர் பலியானதை யொட்டி - முதலாண்டு நினைவஞ்சலிசெலுத்தி சுவரொட்டிகள் நேற்று வெளியிட்டுள்ளது.

மரணமான லெப்டினன்ட் நற்குணம் [யங்கான்], லெப்டினன்ட் சுதாகர் [நிதி], கிருபைநந்தம் [கடாபி] ஆகிய மூவருக்குமே அஞ்சலி செலுத்தப்பட்டிருந்தது.

"அச்சுவரொட்டியில் அன்று சிந்திய குருதி அன்றே காய்ந்து விட்டது, ஆனால் இன்றும் அம்மண் செந்நிறமே தான்; உங்கள் உடல்கள் அன்றே குளிர்ந்து விட்டன, ஆனால் இன்றும் உங்கள் துப்பாக்கிகள் கனன்று கொண்டே இருக்கின்றன" "புலிகளின் தாகப் தமிழீழம்" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(மா)

## ரூபவாஹினி

மாலை:
5-00 செய்திகள்
5-05 கார்ட்டூன்
5-10 தேகாரோக்கியம்
5-30 உலக விளையாட்டு நிகழ்ச்சி
6-30 செய்திகள் (தமிழ்)
7-00 'பிளனட் ஒப் ஏப்ஸ்'
8-00 செய்திகள் (சிங்களம்)
8-25 தொலைக்காட்சி நாடகம்
9-00 செய்திகள் (ஆங்கிலம்)
9-25- கொரிய பௌத்த விவரணச் சித்திரம்
9-50 மிக்லென்ஸ் லோ அங்கம் - 10
10-40 ஒளிபரப்பு முடிவு

## முதலாவது பிறந்ததின வாழ்த்து

### செல்வி மஞ்சுகி ஞானச்சந்திரன்



காங்கேசன்துறை கலவத்தையைச் சேர்ந்த ஞானச்சந்திரன்-தவரஞ்சினி தம்பதிகளின் செல்வப் புதல்வி மஞ்சுகி தனது முதலாவது பிறந்தநாளை குதூகலமாக இன்று அவரது இல்லத்தில் கொண்டாடுகிறார். அவரை அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பாமார்; பெரியம்மாமார், மாமன்மார், அத்தைமார், சித்திமார், மச்சான்மார், மச்சாள்மார், சகோதர, சகோதரிகள், உறவினர்கள், சுற்றத்தார்கள் மற்றும் கோப்பாயைச் சேர்ந்த அப்பப்பா, அப்பம்மா அனைவரும் அம்மன் அருள்பெற்று நீடூழிகாலம் வாழ்க என வாழ்த்துகின்றார்கள். (2490)

## மலிவு விற்பனை

தரமான உடுபிடவைகளையும் Ford Suitcase வகைகளையும் தேர்ந்தெடுத்து வரும் பண்டிகைக்காலத்தை சிறப்பாக ஒருபடி முன்னேற்றத்துடன் கொண்டாடுங்கள். மலிவு விலையில் உடுபிடவைகளைப்பெற:

**லேடன் இன்டஸ்ரியஸ் லிமிட்டெட்**

தயாரிப்புகளைப்பெற இன்றே விரையுங்கள்:
ஞாயிற்றுக்கிழமைகளிலும் விற்பனை நடைபெறும்.

**லேடன் காமன்ஸ்,**
86, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(2485) தொலைபேசி: 22330

## 11-வது வருட நினைவஞ்சலி

### செல்வி கமலாதேவி நவரத்தினக்குருக்கள்

**மலர்வு: 22-05-1952**
**உதிர்வு: 23-12-1974**



உரும்பராய்ப் பகுதியில் உயர்குடி உத்தமியாய் கலையான கலைகளெல்லாம் கற்றுத்தேர்ந்து பாருலகில்நீவிர் வளம் பல கண்டனீர் இவ்வுலகை விட்டு இறைவனடி சேர்ந்தின்று பதினொரு ஆண்டுகள் பறந்துதான் சென்றாலும் பாசமாய் நும்முடன் வாழ்ந்தனும் உமையெண்ணி தவிக்கின்றோமம்மா. உனை என்றும் மறக்கிலோமம்மா.

உன் அன்பின் பிரிவால் நாமின்று தவித்தாலும் எம் அன்பின் தாரகையாய் எந்நாளும் ஒளிர்ந்திடுவாய்.

குடும்பத்தவர்
"சிவோஹம்",
உரும்பராய் கிழக்கு, உரும்பராய். (1707)

உலகச் செய்திகள்

சோவியத் அணுசக்தி

# தளங்களைப் பார்வையிட அமெரிக்காவுக்கு அனுமதி!

மாஸ்கோ, டிச. 20

**சோவியத் யூனியன் தனது அணு ஆயுத பரிசோதனைத் தளங்களைப் பார்வையிட அமெரிக்க ஆராய்ச்சியாளர்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது. இதனையிட்டு அமெரிக்கத்தரப்பில் சோவியத்யூனியனுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அமெரிக்காவுடன் அணுசக்தி ஆராய்ச்சித்துறையில் நெருக்கமானஒத்துழைப்பைக்கெண்டிருக்கும் விதத்திலேயே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்கா, இந்த அனுமதிக்கு நன்றி தெரிவித்துள்ளபோதிலும், இதுகுறித்து மேல் நடவடிக்கைபற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் வெள்ளைமாளிகையின் நெறிப்படுத்தல்களுக்கமையவேஇந்த விடயத்தில் நடந்துகொள்வார்களென்று வெள்ளை மாளிகைப் பேச்சாளரான திரு லரி ஸ்பீக்ஸ் தெரிவித்துள்ளார்.

சோவியத்யூனியன் இந்த ஆண்டின் இறுதிவரை அதன் அணுசக்திப் பரிசோதனைகளை இடைநிறுத்திவைத்துள்ளது. அமெரிக்காவையும் இது போன்று இடைநிறுத்தும்படி கேட்டுக்கொண்டது. ஆனல் அமெரிக்கா இதற்கு மறுப்புத் தெரிவித்தது.

சோவியத் அணுசக்திதளங்களைப் பார்வையிடவழங்கப்பட்டுள்ள அனுமதிமூலம். அமெரிக்காவின் அணுசக்தி திட்டத்தில் பாரியளவு அல்லது குறிப்பிடத்தக்க மாற்றங்களை எதிர்பார்க்கமுடியாதென அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (கி)

சூழல் பாதுகாப்பு:

## ஆபத்து நிறைந்த பயணத்தில் 'கிறீன்பீஸ்' இயக்கம்!

வெலிங்டன் டிச 20

நியூஸிலாந்தின் அணு ஆயுத எதிர்ப்பு, சுற்றுடல் பாதுகாப்பு இயக்கமான கிறீன்பீஸ் இயக்கம் அன்டார்ட்டிக்காவுக்கு சமாதானப் பயணமொன்றை மேற்கொண்டுள்ளது.

தென்துருவமான அன்டார்ட்டிக்காவை அணு ஆயுதமற்ற, மாசுபடாத, எல்லாநாடுகளுக்கும் பொதுவான பிரதேசமாக பிரகடனம் செய்யவே இவ் விஜயம் மேற்கொள்ளப்படுகிறது என இவ்வியக்கத்தின் பேச்சாளர் ஒருவர் பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்.

இவ்வியக்கத்திடம் அன்டார்ட்டிக்காவின்பனிக்கட்டியை ஊடறுத்துச்செல்லக்கூடியகருவிகள்இல்லாததாலும் பயணம் மேற்கொள்ளும் கப்பலில் இக்கட்டான வேளைகளில் பிரயாணிகளை துரிதமாக கரைமீட்க ஹெலிகொப்டர் ஒன்றுகூட இல்லாததாலும் இந்த துருவ விஜயம் ஆபத்துக்கள் நிறைந்ததொன்ருகவே கணிக்கப்படுகிறது.

எனினும் அவசர நிலைமைகளில் செய்மதி மூலம் தொடர்புகளை ஏற்படுத்தும் வசதியை மட்டுமே இவ்வியக்கம் தனது கப்பலில் கொண்டுள்ளது.

இருபத்தைந்து பேர்கொண்ட இக்குழு சுமார் மூன்று மாதங்கள் அங்கு தங்கியிருக்கத் திட்டமிட்டுள்ளதாக அவ்வியக்கம் தெரிவித்துள்ளது.

'சூழல் பாதுகாப்பிற்காக எதனையும் செய்யத் தயாராகவுள்ளோம்' என்பதே இந்த இயக்கத்தினரின் குறிக்கோளாகும். [செ]

# அஸாம் மாநில ஆட்சியில இ. காங்கிரஸ் குறுக்கிடாது!

-- ராஜீவ் காந்தி

கௌஹாத்தி, டிச 20

அஸாம் மாநிலத் தேர்தல்களில் அஸாம் கணடரிஷத் கட்சி பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியமைக்கும் நிலையைப் பெற்றுள்ளது. இந்த வெற்றி அஸாமின் நீண்டகால குழபபநிலைக்கு முற்றுப்புள்ளி வைப்பதாகவுள்ளதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அஸாமில் இந்த வெற்றியைத் தொடர்ந்து அஸம் கணடரிஷத்தின் ஆட்சி அமைப்பு விடயத்தில் இந்திரா காங்கிரஸ் கட்சி குறுக்கிடமாட்டாதென பிரதமர் திரு. ராஜீவ் காந்தி உறுதியளித்துள்ளார்.



அஸாமில் நீண்டகால குழப்பநிலை முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதும் அங்கு ஜனநாயகரீதியில் தேர்தல் நடத்த சந்தர்ப்பம் கிடைத்ததும், அத்தேர்தல்களில் அதிகளவு

(6-ம் பக்கம் பார்க்க)

கோடிக்கணக்கில்

## வரிஏய்ப்பு: ராஜீவ் அரசு கடும் சட்ட நடவடிக்கை!

புதுடில்லி, டிச 20

வரிஏய்ப்பாளர்களுக்கு எதிராக இந்திய அரசாங்கம்தீவிரமடைந்துள்ளது. பல முன்னணித் தொழிலதிபர்களும்வர்த்தகப் புள்ளிகளும் இந்த அரச நடவடிக்கையில் சிக்கியுள்ளனர்.

இந்திய அரசுக்கு பலகோடிக்கணக்கான பணத்தொகையை இந்தக் கோடீஸ்வரர்கள் வரியாகச் செலுத்தாது இருந்துள்ளனர் இதனல் பல நெருக்கடிநிலைகள் தோன்றியுள்ளன.

இந்திய நிதியமைச்சர் திரு. வி. பி. சிங்கின் அறிக்கைகளின் படியே இக் களையெடுப்பு மேற்கொள்ளப்படுகிறது.

பிரதமர் ரஜீவ்காந்தியிடம் இத்தகைய நடவடிக்கை இந்திய வர்த்தகத்துறையைப் பாதிக்குமா? எனக் கேட்கப்பட்டது. இதற்கு அவர் பதிலளிக்கையில் இது ஓர் அரசியல் நடவடிக்கையல்லவென்றும், எனவே இதனல் எந்த விதபாதிப்பையும் தாம் எதிர்பார்க்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஏற்கனவே பல தொழிலதிபர்கள் கைதாகி பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும்பலர் கைதாகி விசாரணைகளுக்குட் படுத்தப்பட்டுள்ளனர். (கி)

# பிரெஞ்சு நீதிமன்றில் பணய நாடகம்!

பாரிஸ், டிச. 20

நீதிமன்றமொன்றினுள் புகுந்த மூன்று துப்பாக்கி நபர்கள்நீதிபதியையும்,ஜூரர்களையும் பணயமாக வைத்த சம்பவமொன்று பிரான்ஸில் நேற்று நடந்தது.

பிரான்ஸின் நான்ட் எனும் இடத்திலுள்ள நீதிமன்றத்திலேயே இச்சம்பவம் நடந்துள்ளது.

சம்பவத்தினத்தன்று ஒரு கொள்ளைவழக்கொன்றுநடந்துகொண்டிருந்தது. இவ்வழக்கில் ஒரு பெண் உட்பட 4 பேர் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தனர்.

அச்சமயத்தில் உட்புகுந்த மூன்று துப்பாக்கி நபர்கள் ஆகாயத்தில் துப்பாக்கியினல் சுட்டுள்ளனர். இதனல் கிலிகொண்ட மக்களின்குழப்பநிலையைப் பயன்படுத்தி அந்தநபர்கள் நீதிபதியையும் ஏனையோரையும் பணயமாக வைத்துள்ளனர்.

வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளநால்வரையும்விடுவிக்காதபட்சத்தில் தாம் பணயக் கைதிகளை கொன்றுவிடப் போவதாக இத்துப்பாக்கி நபர்கள் மிரட்டியுள்ளனர்.

இவர்கள், பொலிஸார் பணயக் கைதிகளை மீட்கும முயற்சியில் ஈடுபடக்கூடாது என எச்சரித்துள்ளனர். பொலிஸார் மீட்பு முயற்சியில் ஈடுபட்டால் பணயக் கைதிகளின்உயிருக்கு தாம்உத்தரவாதமளிக்க முடியாது எனவும் எச்சரித்துள்ளனர்.

பணயம் வைக்கப்பட்டுள்ளவர்களில் ஒருவர் இருதய நோயாளி என்றும் இன்னொருவர் நீரிழிவு நோய் உடையவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரெஞ்சு அரசாங்கம் இத்துப்பாக்கி நபர்களுடன் சமரசப் பேச்சுக்களை நடத்தி வருகிறது. [செ]

பவர்ஸ் உரம்
ஒப்பற்றது

ABC

ரூபா 2,000/- க்கும் மேல்

ஏ.பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்
5, மேல் சத்தம்ஸ் வீதி,
கொழும்பு-1.

### மணிவாக்கு

விண்வெளியில் அல்ல, எங்கள் இரு காதுகளின் இடைவெளியில் என்ன நடக்கிறதென்பதில்தான் எங்கள் நாட்டின் வருங்காலம் தங்கியிருக்கும்.

— எல். ஏ. ரவுன்செண்ட்

## நமது நோக்கு

# வருங்கால தமிழ் மாநிலம்

## தெற்காசியாவின் சுவிற்ஸலாந்து

சுவிற்ஸலாந்து அரசுக்கும் மக்களுக்கும் இலங்கைத் தமிழ் மக்கள் என்றும் நன்றியுள்ளவர்களாக இருக்கக் கடமைப்பட்டவர்கள்.

சர்வதேச பத்திரிகை நிறுவனம் குறிப்பிட்டதுபோல், செய்திகளை இருட்டடிப்பவர்களும், அதனைத் திரிப்பவர்களும் ஒருவித ஆள் கடத்தல்காரரே.

இப்பத்திரிகை நிறுவனம் உலகின் பல பாகங்களில் நடைபெறும் அடக்குமுறைகளையும் அட்டூழியங்களையும் உன்னிப்புடன் அவதானித்து எவ்வித கலப்படமுமின்றி உடனுக்குடன் உலகனைத்திலும் பரப்பிவருகிறது.

உண்மையைச் சொல்ல பிரிட்டிஷ் பிரதமர் தாட்சரின் உடம்பெல்லாம் நோகிறது. பயங்கரவாதச் செயல்களை மட்டுப்படுத்துங்கள்; விளம்பரப்படுத்தாதீர்கள் என்று பிரதமர் தாட்சர் முன்மொழிய அமெரிக்க ஜனாதிபதி றீகன் அதனை வழிமொழிந்திருக்கிறார்.

உலகின் இருபெரும் ஜனநாயக நாடுகள் இவ்வித கோரிக்கை விடுவது விந்தையிலும் விந்தையே. தத்தம் நாடுகளின் உயர்ந்தமரபுக்கு பெரும் இழுக்கு.

இந்தக் கோரிக்கைக்கு நடுநிலைமை வகிக்கும் இச்சர்வதேச பத்திரிகை ஸ்தாபனம் [ஐ. பீ. ஐ.] செவிசாய்க்குமானால் தென்னாபிரிக்காவில் கறுப்பர் சித்திரவதைசெய்யப்பட்டு கொல்லப்பட்டு, நாடு வெள்ளைமயமான பின்தான் இனவெறியர் ஆட்சியின் வெற்றி பிரபலப்படுத்தப்படும்.

தென் ஆபிரிக்க கறுப்பர்களையும் வட இலங்கைத் தமிழர்களையும் ஒரு தராசில் நிறுக்கும் காலம் இன்னும் வரவில்லை; இலகுவில் வரப்போவதுமில்லை.

‘‘கோலமாமயில் மீதேறுங் குமரனை ஒத்த சீரார், பல்லாயிரவர் சாலவும் மகிழ்வு வீரம்தாங்கிய நெஞ்சராகி, மாலையை அணிந்த தோள்கள் மண்ணுற வீழ்ந்தே அன்னை காலினைத் தலையிற் பூண்டு களத்திடை விரைந்து சென்றிருக்கின்றனர்.’’

பல்லாயிரம் வருடத்துக்கு முன் தமிழர் வீரத்தை படம்பிடித்துக் காட்டிய காவியம் ஒன்றை இன்று புதுப்பித்து இவ்வாறு ‘சொக்கன்’ தம்முடைய நெடும் பா (3) என்ற நூலில் வர்ணிக்கிறார்.

அவருக்கு நன்றிகூறி இன்று பயங்கரவாதிகள் என்று இலங்கை அரசு பரிகசிக்கும் இலங்கைத் தமிழ் போராளிகள் உயிர்க்கொலை நீங்க, அரசுடன் சமாதானம் பேசும் கௌரவம் பெற்றிருக்கின்றனர்.

ஆனால் அந்தக் கௌரவம் கேள்விக்குறியென்பது இன்று போர் நிறுத்தம் என்ற போர்வையில் வடக்கில்பொன்னாலை தொடக்கம் மட்டக்களப்பில் மண்டூர் வரைக்கும் இலங்கைராணுவம்நடத்திவரும் வேட்டையில் தெளிவாகிறது.

ஆடாத ஆட்டம் எல்லாம் ஆடி வெற்றிகாணாத அரசு ராணுவ பலத்துடன் சமாதானம் பேசப் போவதாக பாதுகாப்பு அமைச்சர் லலித் சிங்கள இளைஞர்களுக்கு விளக்கமளிக்கிறார்.

ஆயுதக்குறைபாட்டால்தான் இந்த இழுபறியென்றால் அது பூர்த்தியானதும், சமாதானமா அதன்விளைவு.

பல் ஆயிரக்கணக்கில் எங்கள் இளைஞர்களையும், அப்பாவி மக்களையும் பறிகொடுத்த இந்நாட்டின் பழம் பெரும் தமிழ் சமுதாயம் சமாதான வாழ்வை லட்சியமாகக் கொண்டது.

போரில் வெளிப்படும் தமிழ் மறம், மதிப்புடைய சமாதானத்திலேயே திருப்திப்படும்.

தமிழ் மக்கள் யார்; அவர்கள் எங்கு வாழ்ந்து வந்தவர்கள்; எங்கு வாழ்கின்றனர்; அவர்களின் பரம்பரை உறைவிடம் வடக்கா, கிழக்கா அல்லது வடகிழக்கா என்பதை நிர்ணயிப்பது அவ்விடங்களில் வாழ்ந்து வரும் மக்களின் அடிப்படைஉரிமை.

அரசாங்கம் எடுக்கும் ஏற்றுமதி இறக்குமதித் திட்டங்கள் வர்த்தகத் துறையில் பலிக்கும் அடிப்படை உரிமைகளைப் பாதிக்காது.

நாட்டின் இன்றைய நிலைமையையும் தமிழர்களின் தற்கால அவஸ்தைகளையும் விசாரிக்க முயலும் சுவிஸ் அரசுக்கு நாம் என்ன பிரதி உபகாரம் செய்யலாம்?

எவருக்கும் அஞ்சாது, எவர் விவகாரங்களிலும் தலையிட்டு தொல்லை கொடாது அமைதி வாழ்வை வாழையடி வாழையாக விரும்பிவாழும் இலங்கைத் தமிழர் தமது மாநிலத்தை வருங்காலத்தில் தெற்காசியாவின் சுவர்க்க பிரதேசமாக்குவதே தகுந்த நன்றிக்கடனாகும்.

# எழுத்தில் எதனை எளிமைப்படுத்துவது?

### கனசபாபதி நாகேஸ்வரன்

நாவலாசிரியன் தனது நாவலை எழுதி முடிக்கின்றான். அவன் பொதுமக்களிடம் ‘கரு’வைக் கேட்பதில்லை. ஆயினும் மக்கட் சமூகத்தின் நடைமுறைகள், சம்பவங்கள் நாவலாசிரியனிடத்திலேயும் கதையின் பின்னலை நிர்ணயமாக்குகின்றன. இதனால் நாவலாசிரியனது படைப்பு பிறரையும் ஈர்த்து, புரியும்படியான ஒரு தன்மையில் அமைந்து - ஜனரஞ்சக நாவற் பண்பினுக்குட் பட்டுவிடுகின்றது. இது இன்றைய இலக்கிய வடிவங்களுள் ஒன்றாகத் திகழும் நாவல் பற்றிய சிந்தனைகளோடு பெறப்படும் எளிமை வாதம் பற்றியதொரு கருத்தாகும். அதாவது நாவல் நிச்சயம் பிறருக்கு விளங்கும்படியாகத்தான் எழுதப்படல்வேண்டும். அப்படியானால் ‘‘எதை எளிமைப் படுத்தவேண்டும்’’ என்பது தான் கேள்வி.

விடயத்தை எளிமைப்படுத்துவதா? அல்லது விளக்கத்தை எளிமைப்படுத்துவதா? அல்லது எழுத்திலாயின் மொழி நடையில் எளிமையைப் புகுத்துவதா? அல்லது பொதுசனத் தொடர்புசாதனங்களிலே எழுதும்போது எளிமையைக் கொள்ளவேண்டுமா? என்பன போன்ற வினாக்கள் நம்முன் எழுகின்றன.

இப்பிரச்னையில் இன்று மொழி சார்ந்த, இலக்கியம் சார்ந்ததுறைகள் மட்டுமன்றி, ஏனைய அறிவியற்றுறைகளில் ஆய்வு செய்வோரும் தமது பார்வையினைக் கூர்மையுடன் செலுத்துகின்றனர். இக்கட்டத்திலேதான் ‘எளிமை’ என்றால் எத்தன்மைத்தானது? என்ற வினாவெழுகின்றது.

தமிழிலக்கியத்தில் எளிமை வாதம் உரைநடையின் தோற்றத்தோடு ஆரம்பிக்கின்றது. அகத்தியத்திற்கும், தொல்காப்பியத்துக்கும், இறையனார் களவியலுக்கும் உரைகள் எழுதப்பட்டகட்டமே எளிமைப் பண்பின் முதற்கட்டம். எனவே இலக்கியப் படைப்புக்கள் விளங்கும்படியாக எழுதப்படவேண்டுமா? என்பதிலேயே இச்சிக்கல் சர்ச்சைக்குள்ளாகின்றது. எனவே இப்பிரச்னைக்குத் தீர்வும் ‘‘தமிழ்த் துறையினது’’ ஆய்வுப் பரப்புக்குள்ளேயே வந்தமைந்துவிடுகின்றது. ஆகவே, மொழியின் எளிமைப்படுத்தப்படும் பண்பென்பது, மொழி வளர்ச்சியின் வரலாற்று ரீதியான தன்மைகளினூடாகவே கண்டு தரிசிக்கப்படவேண்டியது. மொழி வளர்ச்சியின் பிரதான கட்டம் ‘உரையாசிரியர்களின்’ கால கட்டம். சேனாவரையர், இளம்பூரணர், தெய்வச் சிலையார், அடியார்க்குநல்லார், பரிமேலழகர் போன்றோரே எழுத்தில் எளிமையைப் புகுத்திய முன்னோடிகள், அத்துடன் கருத்துக்களையும் எளிமைப்படுத்திய தத்துவவாதிகள், கோட்பாட்டாளர்கள். இவ்வடிப்படையில் ஈழத்தில் ‘நாவலரது’ உரைநடைப் பணி விதந்து குறிப்பிடப்படவேண்டியதொன்று.

இன்னும் ஒரு படி ஆழமாகச் சிந்தித்தால் மொழியும், மதமும் தமிழில் இணைந்துள்ள பக்குவம் கண்டின்புறவேண்டியதொன்று. தமிழ் கரடுமுரடான மொழியல்ல. இனிமையும், குழைவும், கனிவும் உடைய செந்தமிழ் வழக்குகளைக் கொண்டமைவது.

போதனை, குருகுலக் கல்வி, உபதேசம், புகட்டுதல், பயிற்றுதல், அறமுரைத்தருளல்என்ற சைவசித்தாந்தத்தோடு தொடர்புகொண்ட சொற்கள் ‘எளிமை’ பற்றிய கருதுகோள்களையுள்ளடக்கியனவே. இதனை மீறும் - மறுதலிக்கும் - ‘அறிவிலக்கிய மேதாவிகள்’ மத்தியிலேயே எளிமைப்படுத்தல் என்பது சிக்கலாகியுள்ளது. ஆயினும் ‘எழுத்துச் சீர்திருத்தம்’ இந்திய தமிழ் நாடு மாநில அரசினால் சட்டபூர்வமாக்கப்பட்டமை போன்று ‘கடினமாக,- விளங்காமல் எழுதாதீர்கள்’ என்று சட்டம் கொண்டுவர முடியுமா? அச்சட்டமுந்தான் தேவைதானா?

மொழியின் பணியும் -எழுத்தின் பணியும் மக்கட் பணியாகிவிடும்போதுதான் கௌரவமும் - மதிப்பும் - அவதானிப்பும் பெறுகின்றன. அறிவுலகம் தனது கண்டுபிடிப்புக்களால்மனுக்குலத்தை வாழ்விக்கவேண்டும். ஆகவே எளிமையுடன்- விளங்கக்கூடியதாகவே எழுதவேண்டும்.

## நாளை சுவாமி சச்சிதானந்தா பிறந்ததினம்

மோட்சநிலை அடைவதையும், துறவையும் வாழ்க்கையின்குறிக்கோளாகக்கொண்ட இந்திய விலே கைலாசத்தின் சிகரத்தில் ஊற்று எடுத்து வேதகாலத்தோடு இறங்கி வரும் கங்கைக் கரையில் தவத்தில் அமர்ந்து, மனித தேகம் எடுத்தவர்களின் தனிப்பண்பாடாகிய பிரித்தறிவைப் பாவிப்பதற்கு உதவியான சேவைசெய், அன்புகாட்டு, கொடுத்துப்பழகு, புனிதமடை, தியானம்செய், உன்னை அறி என்ற ஆறுபடிகளைக்கொண்ட மேடையில், மாயை என்னும் இருளை நீங்க வழிவகுத்த பெருமை இமய ஜோதியாம் குருதேவர் சுவாமி சிவானந்தரைச் சேர்ந்தது. அப்படி இருள் நீங்கப் பெற்ற ஒருவர்தான் கோயம்புத்தூரில் செட்டிபாளயத்தில் இராமசாமி என அழைக்கப்பட்டவர். குருதேவரால் மாளை இருள் நீங்கப்பெற்ற இராமசாமி யோகிராஜ் சச்சிதானந்த ஆகினார். முப்பது வருடங்களுக்குமுன் சச்சிதானந்த சிவானந்த மாதாஜியால் இலங்கை மக்களுக்கு சேவைசெய்ய வந்த யோகிராஜ் இலங்கை முழுவதும் பலதிவ்யஜீவனசங்கக்கிளைகளை ஸ்தாபித்தார். அவற்றில் ஒன்றுதான் யாழ். திவ்யஜீவன சங்கம். பத்து வருடங்களாக இலங்கையின் அஞ்ஞான இருட்டை நீக்கி யோகிராஜ் 1966ல் அமெரிக்க மக்களின் அன்புக்கு அடிபணிந்து உறகெங்கும் உண்மை ஒளி வீசி வருபவரின் 71 வது ஜயந்தி விழாவை நல்லூர் சிவானந்த மாதர்சங்கம், யழ். திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் முன்னிலையில் கொண்டாட உள்ளது. நாளை 22ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணியள சிவானந்த சம்ஸ்கிருத வகுப்பு மாணவர்களின் கணபதிசுலோகத்துடன் ஆரம்பமாகி சச்சிதானந்த சிறுவர் சங்கங்களின் கலைநிகழ்ச்சியுடன் முடிவடையும்.

—ஜெயந்தி சுப்பிரமணியம்

## இசை நிகழ்ச்சி

(பொன்)

பரமேஸ் - கோணேஸ் குழுவினர் ஜேர்மனி இசைப்பாடகர் குழுவுடன் இணைந்து அளிக்கும் ‘புலிகளின் கீதம்’ (டைகர்ஸ் வொயிஸ்] என்னும் இசை நிகழ்ச்சி ஜேர்மன் நாட்டில் பல்வேறு இடங்களிலும் நடைபெறவுள்ளது.

இந்த இசை நிகழ்ச்சிமூலம் கிடைக்கும் பணம் ஜேர்மனியில் இயங்கும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அமைப்பிடம் கையளிக்கப்படும்.

## திண்ணபுரப் பெருமானைத் தொழுவோம்

[காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் திருவெம்பாவை மகோற்சவம் 4-ம் நாள்]

திண்ணபுரமேவிய திருநீல மிடற்றினனை-தீய
எண்ணமற தொழுதேற்றி தீங்கிங்கு
களைவோம்
வண்ணக் கிளி மொழியால் பங்கனை
புகழ்ந்தே-யந்த
திண்ணைக் களியானின் திருவிழாக்
கண்டிடுவோம்

மார்கழி நீராடி மகளிரும் நோன்பு கூட்டி
பார் வழியாகவே (திருவெம்) பாவையை
எடுத்தோதி
சீர் நெறி தழைத் தோங்க செந்தமிழ் துயர் நீங்க
கார்முகில் வண்ணி பங்கன் கழலடி
தொழுதிடுவோம்.

-காரைநகர் எம். பி. அருளானந்தன்

### நாளை வைகுண்ட ஏகாதசி

## நாராயண சிந்தனை

செய்யாமை செய்க சிவதொண்டாய்ச் செய்செயலிற்
பொய்யாமை காண்க பொருளென்னச் —
செய்யாமை
காட்டிச் சிவனுண்மை காட்டுஞ் சிவயோக
நாட்டியன்றான் நாரா யணன்

நீட்டியுலகனைத்தும் நீள்வாழ் வளித்துநிதம்
வீட்டி யுலகனைத்தும் வேகவைத்து — நாட்டி
நலம்புனையும் மெய்ம்மை நடம்பயிலு நாதன்
தலம்புனையுந் தாமோ தரன்,

ஆற்றுப் படுத்தும் அருள்காட்டு போதத்தின்
ஈற்றுப் படுத்தும் இகாபரத்தை — மாற்றுந்
தருமத்தை மூட்டுந் தவஞான வாழ்வைத்
தருமந்தத் தாமோ தரன்.

நாரணனே நான்முகற்கு நாதனே கற்போதக்
காரணனே காருண்ய கற்பகமே — பூரணனே
நீதிக்கு நிற்கும் நெடுமாலே நீள்ஞானம்
போதிக்குத் தாளே புகல்.

— ச. தங்கமாமயிலோன்

## தமிழ் இளைஞர்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாகுபாடு காட்டப்பட்டு, சித்திரவதைக்குள்ளாகிச் சீரழிந்தனர் என்றும் தெரிவித்தனர்.

''தென்னிலங்கை அரசியல்வாதிகளால் ஒரு பகுதியினரின் ஆதரவுடனும் பாதுகாப்புப் படையினரின் ஒத்தாசையுடனும் தமிழ்மக்கள் துன்புறுத்தப்பட்டு வந்தனர், 1981 ஆம் ஆண்டு பாதுகாப்புக்கு வந்தவர்களே யாழ். நகரில் நூல் நிலையம், பத்திரிகாலயம், மற்றும் பல கட்டிடங்களுக்குத் தீவைத்து எரித்தனர். 1983 ம் ஆண்டு வடக்கு, கிழக்கிற்கு வெளியே உழைத்த தமிழர்கள் படுமோசமாகத் தாக்கப்பட்டு பலர் பலியானார்கள். இதன் காரணமாக வீடுகளை, சொத்துகளை இழந்து தமிழ்மக்கள் அகதிகளாக்கப்பட்டனர். தமிழ் மக்களின் பொருளாதாரம் முற்றாகச் சீர்குலைந்தது. கல்வி பாதிக்கப்பட்டது'' என்று அன்னையர் முன்னணியினர் எடுத்துக் கூறினார்கள்.

''அரசினதும், ஆயுதப்படையினரதும் நடவடிக்கைகளினால் தமிழருக்குப் பல கஷ்டங்கள் ஏற்பட்டதால் பலர் வெளிநாடுகளுக்கு அடைக்கலம் கோரிச் சென்றதாகவும் அன்னையர் முன்னணியினர் தெரிவித்தனர்:

ஜேர்மனிக்குள் செல்லமுடியாதவர்களும், ஜேர்மனியிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களும் சுவிஸில் தஞ்சமடைந்திருந்தனரென்றும் 80-ஆம் ஆண்டு முதல் 83 ம் ஆண்டு வரை அகதிகளாக்கப்பட்ட தமிழ்மக்கள் இன்னும் பழைய இடங்களுக்குத் திரும்பிச்செல்லவில்லை என்றும் தெரிவித்தனர். அன்னையர் முன்னணியினர் மகஜர் ஒன்றையும் கையளித்தனர். [க]

## அரசியல் தீர்வு காணும் வரை...

1-ம் பக்கத் தொடர்ச்சி]

பிரச்னைகள் பற்றி விளக்கப்பட்டுள்ளது. அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''சுவிஸ்ஸில், கடந்த வருட இறுதிவரை அடைக்கலம் கோரியவர்களை இலங்கைக்கு அனுப்புவதில்லை என்ற சுவிஸ் அரசாங்கத்தின் முடிவுக்கு நாங்கள் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம்.

''இலங்கை இனப் பிரச்னையைத் தீர்க்க இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியின் துணையுடன் நன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை தாங்கள் அறிவீர்கள். எனினும் கடந்த சில மாதங்களாக, யாழ்ப்பாணத்தைத் தவிர்ந்த ஏனைய தமிழ்ப்பகுதிகளில் பல அப்பாவி மக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன், அவர்கள் உடமைகளுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது. இதனால் ஆயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்புக் கருதி யாழ்ப்பாணத்தில் தஞ்சம் புகுந்துள்ளனர். நிலைமை இவ்விதமிருக்க, சுவிஸில் அடைக்கலம் புகுந்துள்ள இத்தமிழ்மக்களை, தென்னிலங்கையில் அகதிகள் முகாம்கள் அமைத்து அங்கு குடியமர்த்த யோசனைகள் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அறியவருகிறோம். இச்சந்தர்ப்பத்தில் நாம் சில உண்மைகளை உங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகின்றோம்.

''இலங்கையிலுள்ள தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைகள் முதன்முதலில் 1958-ம் ஆண்டில் தமிழ்ப் பகுதிகளில் அகிம்சை முறையில் ஒத்துழையாமைப் போராட்டம் ஒன்றை தமிழர்கள் நடத்திய காரணத்திற்காக சிங்களப்பகுதிகளிலேயே நடந்தன. இதனால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் தமிழ்ப்பகுதிகளை நோக்கி குடிபெயர்ந்தனர். எனினும் பதவியிலிருந்த அரசாங்கம் அம்மக்களின் உயிருக்கும் உடமைக்கும் உத்தரவாதம் அளித்து மீள வரும்படி அழைத்ததினால் அவர்கள் பழைய இடங்களுக்குத் திரும்பினர். இக்கட்டத்தில் 77ம் ஆண்டிலும், 83ம் ஆண்டிலும் நடத்தப்பட்ட வன்முறைச்சம்பவங்கள் தமிழ் மக்கள் நிரந்தரமாகவே தென்னிலங்கையைவிட்டு கொழும்பைத் தவிர்த்து தமிழ்ப்பிரதேசங்களுக்கு குடிபெயரவைத்தன. இதனாலேயே அங்கு விஜயம் செய்பவர்களுக்கு அப்பகுதிகள் [தென்னிலங்கை) அமைதியான பிரதேசங்களாகக் காட்சியளிக்கின்றன.

''இந்நிலையில் தமிழ் இளைஞர்கள் தென் இலங்கைக்கு அனுப்பப்பட்டால் இவர்கள் அங்கு தாக்குதலுக்கு உள்ளாக கூடிய அபாயம் இருப்பதுடன் தமிழ் மக்களைப் பணயமாக சிங்களப் பகுதியில் வைத்திருக்க இலங்கை அரசாங்கத்துக்கு உதவும் செயலாகவே இருக்கும்.

இதுவரை காலமும் இந்த இளைஞர்களின் பிரச்னையை மனிதாபிமான முறையில் அணுகிய உங்கள் அரசாங்கம் இலங்கையின் இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வொன்றை காணப்படும்வரை தமிழ் இளைஞர்களை திருப்பி அனுப்புவதில்லை என்ற தீர்மானத்தை மாற்றிக் கொள்ளவேண்டாமென்று வேண்டுகிறோம்.''

## உயிருக்கு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

டந்தகால அனுபவமாதலால் அந்த யோசனையை கைவிடுமாறு கேட்டுக்கொள்கிறோம்''

யாழ். கச்சேரியில் சுவிஸ் குழுவினரை நேற்றுக்காலை சமயத் தலைவர்கள் சந்தித்தபோது பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம செயலாளர் சுவாமி சித்ரூபானந்தா மேற்கண்டவாறு கூறி மகஜர் ஒன்றையும் கையளித்தார்.

**இச்சந்திப்பின்போது பிஷப் அம்பலவாணர், நல்லை ஆதீனம் வணபிதா மைக்கல்சாமி,** வணபிதா யேசுதாசன், அல்ஹாஜ் எம். எம். எஸ். அப்துல்காதர், முகமட் ஜின்னு முகமட் சுபைர் மற்றும், ஐந்து 'சிஸ்ரர்ஸ்' இடம்பெற்றனர்.

''1984 ஆகஸ்ட் முதலாம் திகதி முதல் தங்கள் பகுதியில் நிலைமை மோசமடைந்துள்ளதாகவும், சில குடும்பங்கள் குடும்பத் தலைவனை இழந்துவிட்டனரென்றும் சிலர் படுகாயமடைந்துவிட்டார்களென்றும் இதனால் அக்குடும்பங்கள் சீவியத்திற்குக் கஷ்டப்பட்ட நிலையில் தாங்கள் உணவுப்பொருட்களும் பால்மாவும் வழங்கியதாகவும் சுவாமி சித்ரூபானந்தா தெரிவித்தார்.

இவ்வருடம் சுமார் 120குடும்பங்கள் தங்கள் குடும்பத் தலைவரை இழந்துவிட்டதால் தங்களிடம் உதவிக்கு வந்ததாகவும் அவர்களின் சீவியத்திற்காக மாதந்தோறும் உணவுப் பொருட்கள் வழங்கிவருவதாகவும் கூறினார்.

சேதப்படுத்தப்பட்ட அவர்களின் வீடுகள் கட்டிக்கொடுக்கவும் நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

சொந்த இடத்தில் பாதுகாப்பு இல்லாததினால் பலர் பாரம்பரிய தாயகத்தை விட்டுப்புறப்பட்டு மேற்கு ஜேர்மனி, சுவிற்சர்லாந்து, இங்கிலாந்து, பிரான்ஸ் அவுஸ்ரேலியா, கனடா போன்ற நாடுகளுக்குச் சென்றுள்ளதாகவும் அவர் கூறினார்.

பருத்தித்துறையில் இரு கல்லூரிகளுக்கு அருகில் ஆயுதப் படையினரின் முகாம் அமைக்கப்பட்டதால் அக்கல்லூரிகளை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டிய கட்டாயநிலை ஏற்பட்டதாகவும் பல கோயில்களில் பூசை நடப்பதில்லை என்றும் வீடுகள் பூட்டப்பட்டிருப்பதாகவும் கடற்றொழிலாளர் தொழிலுக்குச் செல்வதில்லை என்றும் வர்த்தகர்களும்பாதிக்கப்பட்டிருப்பதாகவும் மக்களின் வாழ்க்கை முற்றாகச் சீரழிந்துள்ளதாகவும் அவர் கூறினார். [க]

## அறிக்கை

(போபால்)

முறையற்றவிதத்தில் வாயுவை சேமித்து வைத்திருந்ததே போபால் வாயுக் கசிவுக்கும் காரணமாக இருந்திருக்கலாம் என்று இந்திய விஞ்ஞான அபிவிருத்தி ஆராய்ச்சிக் கழகத்தின் அறிக்கை தெரிவித்துள்ளது.


**உஷாமினி**
10-30, 2-30, 4-45, 6-45
AMERICAN WARRIOR

**எம்பயர்**
7 அடித்திரையில்
10-30, 2-30, 6-30 9-15
சிவகுமார் - அம்பிகா
**கற்பூரதீபம்**

**லிடோ சினிமா**
10-30, 2-30, 4-30, 6-30
இலகரூனிக் சுறுமீனின் சாகசக் காட்சிகள் நிறைந்த
JAWS III

**வெலிங்டன்**
10-30, 2-30, 6-30
சிவகுமார்-பிரமிளா நடித்த
பாலச்சந்தரின்
**அரங்கேற்றம்**
25-ந் திகதி முதல்
**நான் பாடும் பாடல்**

# அலங்கார சிறு விளம்பரச் சேவை

**எசன்ஸ்!**
விழாக்காலம் நெருங்கிவிட்டது!
**நத்தார் புதுவருட பண்டிகையை**
சிறப்பாக கொண்டாட
கேக் வகைகளுக்குத்தேவையான சகல மூலப்பொருட்களும் எசன்ஸ் வகைகளும், காகிதாதிகள் அச்சகத்திற்குத் தேவையான எல்லாப் பொருட்களுக்கும் உடனே நாடுவீர்:
**பெற்று எசன்ஸ் சப்ளையர்ஸ்**
223. மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(ஆஸ்பத்திரி வீதி, முன்பாக)

**நான்!**
மஞ்சரியினரும் யாழ் மறைக்கல்விநடுநிலையத்தினரும்
சேர்ந்து வழங்கும்
**கிறிஸ்மஸ் ஒளிவிழாவும்**
**'நான்' 12வது ஆண்டு மலர் வெளியீட்டு விழாவும்**
இன்று 21-12-85 யாழ் புனித பத்திசிரியார் கல்லூரி மண்டபத்தில் பிற்பகல் 4-30 மணிக்கு.
அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.
பிரவேசம்: இலவசம்

**வீடியோ பிரசாத்!**
மினிசினிமா உரிமையாளர்களுக்கு ஓர் அழைப்பு!
எமது வீடியோ கழகத்தில் அங்கத்தவராகி பழைய புதிய தரமான வீடியோ பிரதிகளைப் பெற்று உங்கள் ரசிகர்களை பரவசப்படுத்துங்கள்.
**வீடியோ பிரசாத்**
(சத்திரச் சந்தி)
232, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**நெல்லிரசம்**
சுவை, சுகாதாரம், தரம் இவற்றிற்கு என்றும்
தோலகட்டி நெல்லிரசம்
மக்கள் மனதில் கடந்த 60 வருடகால நிலைத்தபெயர்
தோலகட்டி நெல்லிரசம்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற
**வரணி மிசன் பாம்** (விற்பனை நிலையம்)
145, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

**யூனிவேர்சல்**
நேரடித் தொலைபன்னி—
சர்வதேச தொலைபேசித் தொடர்புகளுக்கும், ரெலக்ஸ் வசதிகளுக்கும்:
யூனிவேர்சல் [ஆஸ்பத்திரி முன்பாக]
550, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
ரெலக்ஸ்: 22136/ Unitece/ CE — இரவு பகல் சேவை — தொலைபேசி: 23006, 23100

**Unive sal**
Direct Dialing and Telex Service.
We Serve You Round the Clock to Give you Better Attention
550, HOSPITAL ROAD, JAFFNA.
Telephone: 23006- 23100.
Telex: 22136/Unitece /CE

**மணிக்குரல்! விளம்பர சேவை**
யாழ். பஸ் நிலையம் பஸ்தரிப்பு நிலையங்களிலும்
மினி பஸ் தரிப்பு நிலையங்களிலும்
பிரயாணிகள் கேட்டு மகிழ
தினமும் காலை முதல் மாலை வரை
தினசரி வர்த்தக விளம்பர ஒலிபரப்பு
மேஜர் ஷண் நடாத்தும்
**மணிக்குரல் விளம்பர சேவை**

**CANON**
கனென் தெளிவான போட்டோ பிரதிகளை ரூபா 1/-க்கு பெறுங்கள்.
அத்துடன் தெளிவான தட்டச்சு (Typing) பிரதிகளை, அச்சிட்டுப்பெற நாடுங்கள்:
**Hilton Radios**
**ஹில்ரன் ரேடியோஸ்**
544, ஆஸ்பத்திரி வீதி (ஆஸ்பத்திரி முன்பாக)
யாழ்ப்பாணம்.

விளம்பர அமைப்பு: ஜோ. எகட்டன் 'செனித்' மார்க்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ் யாழ்நகர்.

# கலைப்பட்டதாரி ஆசிரியர்கள் இதோ பெயர் விபரம்

(கொழும்பு)
(நேற்றைய தொடர்ச்சி)

கலைப்பட்டதாரி ஆசிரியர் விபரம்:

செல்வி என். நித்சிங்கம் (சித்தன்கேணி), செல்வி ஜீ. இராஜேஸ்வரி (கொக்குவில்), செல்வி ரி. சாந்தி (யாழ்ப்பாணம்), செல்வி ஆர். குலசெல்வராணி (வேலணை), வி. இராஜகுலசிங்கம் (வரணி), செல்வி ஏ. வசந்தா [மட்டக்களப்பு], ஏ. சுந்தரலிங்கம் (கரவெட்டி), செல்வி ஏ. செல்லத்துரை (நல்லூர்), செல்வி கே. சேதுகாவலர் (மானிப்பாய்), செல்வி ரி. திருச்செல்வி (வட்டுக்கோட்டை), திருமதி ஆ. முத்துத்தம்பி (கோண்டாவில்), செல்வி கே. சுசிலா (சாவகச்சேரி), பி. சந்திரசேகரம் (தெல்லிப்பழை), செல்வி ஜே. செல்வரத்தினம் (கொக்குவில்), செல்வி ரி. கந்தசாமி .(கொக்குவில்), செல்வி ஏ. தனலக்ஷ்சுமி (நீர்வேலி), செல்வி பி. புஸ்பராணி (கொடிகாமம்), செல்வி வி. வனஜா(சுழிபுரம்), செல்வி கே. கனகரத்தினம் (மீசாலை), செல்வி எஸ். மின்னொளிவதனம் (வல்வெட்டித்துறை), செல்வி எஸ். கனகசிங்கம் (கோண்டாவில்), செல்வி வி. அரியரத்தினம் (மானிப்பாய்), செல்வி எஸ். கௌரியம்பாள் (புன்னாலைக்கட்டுவன்), கே. கிரிதரன் (யாழ்ப்பாணம்), எஸ். செல்வராசா (கைதடி), செல்வி ரி. சுந்தரி (சித்தன்கேணி), செல்வி எம். சண்முகநாதன் (கொக்குவில்), செல்வி கே. நிர்மலா (நல்லூர்), செல்வி கே. சாந்தகுமாரி (மீசாலை), பி. ஆறுமுகம் (பதுளை), எஸ். எம். சகீம் (அம்பாந்தோட்டை), செல்வி ஆர். யூ. எம். இஸ்மாயில் (அளுத்கம), எம். ஜே. செல்வராஜா (பொகவந்தலாவ), எஸ். இராஜதுரை [நோர்வூட்), ஏ. ஆர். எம். ரபாய் (றம்புக்கனை), திருமதி எம். எஸ். எஸ். முசாக்கா [தருகாநகர்], ஏ. எச். எம். சம்சூதீன் (கபூறுக்கலை), எம். பூபாலபிள்ளை [யாழ்ப்பாணம்], எஸ். முகமது (மூதூர்), கே. சுந்தரமூர்த்தி (மூதூர்), யூ. ஏ. கே. கபூர் (மூதூர்), செல்வி எம். யூட்சியா (மூதூர்), யூ. எஸ். ஆர். கபூர் (கிண்ணியா), செல்வி வி. எம். யூசுப் (வட்டோலகம), செல்வி வை. ஆரவந்தியப்பிள்ளை (கண்டி), செல்வி எச். சல்கா உம்மா (கேலிஓயா), செல்வி என். மொகதீன் (கண்டி), செல்வி ஏ. ஜி. எல். யசீனு [பெல்தோட்டை], செல்வி என். ஆறுமுகம் (மட்டக்களப்பு), செல்வி கே. திலகவதி (களுவாஞ்சிக்குடி), செல்வி பி. பீதாம்பரம் (மட்டக்களப்பு), செல்வி பி. இராஜநாதன் (மட்டக்களப்பு), ஏ. ஜே. எம். இசாத் [சம்மாந்துறை), எஸ். கமலநாதன் (மட்டக்களப்பு), செல்வி ஆர். மாணிக்கபிள்ளை (குருக்கள்மடம்), செல்வி ரி. நிர்மலா (மட்டக்களப்பு), செல்வி வி. இராசையா (மட்டக்களப்பு), செல்வி ஏ. பாக்கியம் (மட்டக்களப்பு), செல்வி ரி. அரியமலர் (கல்லாறு), செல்வி எஸ். சிவலிங்கம் [மட்டக்களப்பு], செல்வி ரி. யமுனு (மட்டக்களப்பு), செல்வி கே. அமிர்தா (மட்டக்களப்பு), ஏ. எஸ். எஸ். இஸ்மாயில் [ஏறுவூர்]

கே சிவானந்தன் (களுவாஞ்சிக்குடி), செல்வி எல். ஏ. குத்தூஸ் (மட்டக்களப்பு), செல்வி பி. சந்திரகௌரி (ஏறுவூர்), செல்வி எஸ். இரத்தினம்மா (களுவாஞ்சிக்குடி), ஆர். கோபாலபிள்ளை (களுவாஞ்சிக்குடி), எஸ். மனோகரன் (குருக்கள்மடம்), செல்வி ஈ. தேவபாக்கியம் (களுவாஞ்சிக்குடி), ரி. புஸ்பராஜா (களுவாஞ்சிக்குடி), செல்வி எம். புனிதமலர் (பெரியபோரதீவு), செல்வி என். மாலினி (மட்டக்களப்பு), செல்வி என். குமாரசிங்கம் (வவனியா), செல்வி எம். மாரிமுத்து [திருமலை], திருமதி எஸ். சிவசங்கரன் [திருமலை], செல்வி பி. சண்முகம் [திருமலை], எஸ். பரமலிங்கம் (கிளிவெட்டி), பி.பி.ஞானப்பிரகாசம் (திருமலை), செல்வி எல். ரி. உம்மா (புல்மோட்டை), செல்வி பிரிசட் (திருமலை), செல்வி கே. நித்தியப்பிரகன் (மூதூர்), ஆர். தவராசா (களுவாஞ்சிக்குடி) வி.குணபாலன் (அக்கரைப்பற்று), கே. சந்திரலிங்கம் (கல்முனை), செல்வி எம். ஐ. ஜே. பீபி (அக்கரைப்பற்று), செல்வி கே. தம்பிராசா (கல்முனை), பி. குணுளன் (கண்டி), செல்வி ஜி. விஞ்ஞேதினி (காரைதீவு), எஸ். எல். எம். யாசீர் (சம்மாந்துறை), செல்வி என். ஈ. சூசைதாசன் (கிளிநொச்சி), எஸ். மாணிக்கராசா (பரந்தன்) செல்வி ஜி. சசிகலா (நல்லூர்), செல்வி. கே. பிந்தவதி (கோண்டாவில்), செல்வி T. மீனுலோசினி (கோப்பாய்), ஐ.பேரின்பராஜா (பேராதனை), எம்.எஸ். ஞானபண்டிதன் (பேராதனை), செல்வி ஈ. மாலினிதேவி (களுவாஞ்சிக்குடி), செல்வி கே. சரஸ்வதி (களுவாஞ்சிக்குடி), செல்வி பி. சாந்தகுமாரி (கொழும்பு), கே. கனகசபாபதி (கொட்டடி), செல்வி வி. கதிரவேலு [இளவாலை], செல்வி வி. வேலுப்பிள்ளை [அல்வாய்], செல்வி. ரி. சிவலோகதயாபரி அம்பாள் முல்லைத்தீவு) செல்வி பி.பிரேமா (முள்ளியவளை, எம்.ரகுநாதன் (முள்ளியவளை), செல்வி எப்.ஜ. உம்மூசலிமா (குருநாகல்), செல்வி எஸ்.லோதுமணி (திருக்கேதீஸ்வரம்) செல்வி என் ஆர். காந்திப்பிள்ளை (உயிலங்குளம்) எஸ். ஸ்ரனிலோஸ் (யாழ்ப்பாணம்), செல்வி எஸ். எம். ஜெயலக்ஷ்மி(சுன்னுகம்) செல்வி கே.கிருஷ்ணவேணி (சுழிபுரம்) செல்வி வி. கலாநிதி (கொடிகாமம்),திருமதி எஸ். விக்கினேஸ்வரன் (உடுவில்), செல்வி வை.குணநாயகம் (உரும்பிராய்), செல்வி கே. நாகரத்தினம் (சித்தங்கேணி) செல்வி ஜே. நாகலிங்கம் [சங்கானை], செல்வி எஸ். சேனுதிராசா [வட்டுக்கோட்டை], திருமதி ஆர்.சொற்பனலிங்சம் [சுழிபுரம்], செல்வி எஸ் பிரபாசரி [வட்டுக்கோட்டை], செல்வி எஸ். தயாநிதி தெல்லிப்பளை], செல்வி கே. சரவணமுத்து [கொக்குவில்], செல்வி கே. ஜெயராணி [நயினுதீவு], திருமதி ரி. சந்திரவதனி [யாழ்ப்பாணம்].

[தொடரும்]

## பரிதாப மரணம்

(பண்டத்தரிப்பு)

செக்கு இழுக்கும் போது செக்கிலிருந்து தவறி விழுந்த நபர் ஒருவர் யாழ் அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானுர்.

பண்டத்தரிப்பு, பிரான்பற்று என்னுமிடத்தை சேர்ந்த இராசையா அமரசிங்கம் என்ற 48 வயதுடைய நபரே இவ்வாறு இறந்தவராவார்.

சம்பவ தினத்தன்று காலமானவர் நல்லெண்ணை தயாரிப்பதகாக செச்கை இழுத்துக் கொண்டிருந்த வேளையில் செக்கு இழுத்துக்கொண்டிருந்த மாடுகளில் ஒன்று திமிறி ஓடியபோது காலம் சென்றவர் செக்கிலிருந்து கீழே விழுத்துபடுகாயம் அடைந்ததாகவும் இவரை உடனடியாக யாழ் அரசினர் வைத்தியசாலைக்கு கொண்டு சென்று அனுமதித்த போது அவர் அங்கு மரணமானுர் என்று மரண விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

மரண விசாரணை அதிகாரி திரு. கே. சேசவன் மூளையில் ஏற்பட்ட அதிர்ச்சியினுலும், இரத்தப் பெருக்கினுலும் ஏற்பட்ட மரணம் என்று தீர்ப்பு வழங்கினுர்.

## அஸாம்.,.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)


வாக்குப் பதிவுகள் இடம் பெற்றதும் குறிப்பிடத்தக்க சிறப்பம்சங்களாகும் என்று பிரதமர் காந்தி தெரிவித்துள்ளார்.

அஸாம் கணபரிஷத் அறுதிப் பெரும்பான்மை வாக்குப்பெற 9 இடங்களே நேற்றைய காலை நேர அறிவிப்பு விபரங்களின் படி தேவைப்பட்டிருந்தன.

அஸாமில் கடந்த ஆறு வருடங்களாக வெளியார் (பங்களாதேஷ்) பிரச்னையால் பெரும் நெருக்கடி நிலைதோன்றியிருந்தது. இதனுல் 1982ம் ஆண்டு இங்கு 3 ஆயிரபேர் கொலை செய்யப்படுமளவுக்கு அந்த நெருக்கடி நிலை கட்டு மீறியிருந்தது.

கடந்த இந்திய சுதந்திர தினத்துக்கு முதல் நாளே அஸாம் மாநிலப் பிரச்னைக்குத் தீர்வுகாணப்பட்டு, அங்கு தற்போது பொதுத்தேர்தல்சளும் நடத்தபட்டட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (கி)


பவர்ஸ்
வீட்டுத் தோட்ட உரவகைகள்




தேவையான விசேட உரத்தின் இலக்கத்தைக் குறிப்பிட்டுப் பெறுங்கள்.

இல. 1. தாவர A வர்க்கம்
இல. 2. தாவர B வர்க்கம்
இல. 3. பழ மரங்கள்
இல. 4. இச்சிலி மரங்கள்
இல. 5. வாழை, அன்னுசி
இல. 6. விசேட பப்பாசி
இல. 7. விசேட உருளைக்கிழங்கு
இல. 8. விசேட மிளகாய்
இல. 9. விசேட வெண்காயம்
இல. 10. மலர் – பொது
இல. 11. விசேட புற்றரை
இல. 12. றேசா – செவ்வரத்தம்பூ
இல. 13. அந்தூரியம், பெக்கோனியா
இல. 14. மலர் – ''விசேடம்''
இல. 15. விசேட வெற்றிலை
இல. 16. விசேட திராட்சை
இல. 17. விசேட ஸ்ரோபறி
இல. 18. தெங்கு, செவ்விளந்தென்னை விசேட உரம்

ஏ.பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்
தபாற்பெட்டி இல. 11 கொழும்பு.

MASTERS ABC 2/83

2 கி. கி. பொலித்தீன் பக்கெட்டின் விலை ரூபா 9/- மட்டுமே.



அலங்கார விளம்பர சேவை

விளம்பரங்களை லாபகரமாகவும் சிறிய விளம்பரங்களாகவும் பிரசுரிப்பதற்கு வசதியாக

அலங்கார சிறு விளம்பர சேவை

ஒன்றை ஆரம்பித்துள்ளோம். இச்சேவை ஒரு கூட்டு விளம்பரத்தொகுப்பாகும். இவ்விளம்பரங்களை பிரசுரிப்பதற்கு

ஜோ. எக்கட்டன்,
செனித் மார்க்கட்டிங் அன் அட்வட்டைசிங் சிஸ்டம்ஸ்,
139, கடற்கரை வீதி - யாழ்ப்பாணம்.

ஆகியோரை நியமித்துள்ளோம். மேலும் தகவல்களைப் பெறுவதற்கு எம்முடன் தாங்கள் தொடர்பு கொள்ளலாம்.

தொலைபேசி: 24126

உங்கள் விளம்பரங்களை கொடுத்துதவுவதற்கு வசதியாக மேற்படி முகவர் உங்களுடன் நேரடித் தொடர்பு கொள்வார்.

நிர்வாகி,
'ஈழநாடு' - யாழ்ப்பாணம்.

[2450]

# இன்றைய பலன்

மாதம்- மார்கழி
திகதி- 6(1985-12-21)
கிழமை- சனி
திதி- தசமி
பின்இரவுவரை
நக்ஷத்திரம்- ரேவதி
பிற்பகல் வரை

மேடம்- இனபந்துக்கள் மத்தியில் பூசல்தோன்றும். மனக்குமைச்சலினால் வேதனைப்படுவீர்கள். பிள்ளையொன்றின் உடல்நலம் பாதிக்கப்படலாம்.

இடபம்: அதிகாரப் பேறுக்கும் அதிக பொருள் வரவிற்கும் இடமுண்டு. ஆக்கப்பணியில் அதிகம் ஈடுபடுவீர்கள். குடும்பத்திலும் அதிக மகிழ்ச்சி நிலவும்.

மிதுனம்: தூக்கம் விழிகளைத் தழுவ மறுக்கும். கடந்த கால நிகழ்ச்சிகள் அலைமோதும். சகோதர வழியால் சஞ்சலத்திற்கும் இடமுண்டு.

கடகம்: மதி வழிநடப்பின் மற்றவர்கள் பெருமைப்படுமளவிற்கு முன்னேற்றமுண்டு. அறிஞர்கள் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும்.

சிங்கம்: வரவேற்கவேண்டிய சம்பவங்கள் இடம் பெறும். புத்திரர்களால் பெரு மகிழ்ச்சிக்கு இடமுண்டு. பெரிய இடத்து தொடர்பு பெருமையைத் தரும்.

கன்னி: எக்காரியத்திலும் அதிகம் கவனஞ் செலுத்தவும். உதவி செய்யப்போய் குறைகேட்க நேரிடும். உடல் நலத்தைப் பேணவும்.

துலாம்: களஸ்திர வழியால் மகிழ்ச்சிகரமான சம்பவம் இடம்பெறும். நீண்டநாள் பகை இன்று நிவர்த்தியாகும். காதலர் வாழ்விலும் பிணைப்புக்கள் இறுகும்

விருச்சிகம்: எதிர்பார்த்த விடயங்களில் தடைகள் ஏற்படும். தொழிற்துறைகளில் திருப்திகுன்றும். அவசரப் போக்கைத் தவிர்க்கவும்.

தனுசு: நீண்டநாள் பிரச்னையில் இன்று சமரச முடிவு காணப்படும். மற்றவர்கள் மத்தியில் நல்ல பெயரைச் சம்பாதித்துக் கொள்வீர்கள். சிலருக்கு அரசியலில் ஆர்வம் பிறக்கும்.

மகரம்: துணிச்சலுடன் காரியங்களை சாதிப்பீர்கள். விவசாயிகள் வாழ்க்கையில் முன்னேற்றமுண்டு. மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் பிறக்கும்.

கும்பம்: பணவிடயத்தில் நல்ல மாறுதல்கள் ஏற்படும். கல்வித்துறையில் பிள்ளைகளின் திறமை சுடர் பரப்பும். நீண்ட நாள் நண்பரொருவர் உதவிக்கு வருவார்.

மீனம்: கடன்பட்டார் நெஞ்சம்போல் கலங்கி நிற்பீர்கள். விடயங்கள் அனைத்தும் மூடுபனியாக இருக்கும். சிக்கல் நிறைந்த தினமாகும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## புதிய நிர்வாகிகள்

[யாழ்ப்பாணம்]

காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை 7 சிவகாமிச் சங்கக்கிளையின் நிர்வாக சபைக்கான தேர்தல் அண்மையில் நடைபெற்றது.

திருவாளர்கள் க. சோமசுந்தரம், சி. சிவநேசன், நி. சிவமணி, பெ. கணபதிப்பிள்ளை, மு. ஆண்டி, ச. துரைச்சாமி, க. முருகேசு, பொ. இராசரத்தினம், பா. கோவிந்தராசா ஆகியோர் போட்டியின்றி ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்,

திரு. சோ. குமாரவேலு தேர்தல் உத்தியோகத்தராக கடமையாற்றினர்.

## இப்படியும் நடக்கிறது

இந்தியப் பெருநகரங்களில் ஒன்றுதான் கல்கத்தா. கல்கத்தா, மேற்கு வங்காளத்தின் தலைநகரம் ஆகும்.

கல்கத்தாவின் நடைபாதைகளில் வாழ்க்கை நடத்துவோரின் எண்ணிக்கை என்ன தெரியுமா?

பதினெரு ஆயிரம் அல்ல. பதினெரு லட்சம் ஆகும்! (நன்றி: தாயகம்)

'ஊடுருவி'

## "தலைவர்களாக நல்ல பண்பாடு அவசியம்"

(யாழ்ப்பாணம்)

"பெற்றோர்கள், ஆசிரியர்கள் எல்லோரும் பிள்ளைகள் நற்பெயருடன் நல்லவர்களாக வளர்வதற்காகவே மிகவும் பாடுபடுகிறோம். நல்ல பண்பாடுகள் இருந்தாலே மாணவர்கள் சமுதாயத்தில் தலைவர்களாக உயரமுடியும்"

இவ்வாறு யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெற்ற பாலர் பகுதிப் பாடசாலையின் பெற்றோர் தின விழாவில் பேசும்போது இக்கல்லூரியின் அதிபர் வணபிதா பிரான்சிஸ் யோசப் தெரிவித்தார்.

யாழ். ஆயர் அதி வணக்கத்துக்குரிய பி. தியோகுப்பிள்ளை ஆண்டகை இவ்விழாவுக்குத் தலைமை வகித்தார்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவப் பீடப் பேராசிரியர் சி.சி. பாலசுப்பிரமணியம் உட்படப் பலர் பேசினர்கள். (ஐ)

---

அரசாங்க உரித்துடைய வரையறுக்கப்பட்ட

## சீ-நோர் அபிவிருத்தி நிறுவனம், குருநகர்

## 1986-ம் ஆண்டுக்கு வழங்குநர்களைப் பதிவு செய்தல்

பின்வரும் பொருட்களையும், சேவைகளையும் வழங்குவதற்குத் தாமாகவே பதிவு செய்ய விரும்பும் இலங்கையிலுள்ள வியாபார நிறுவனங்கள், உற்பத்தியாளர்கள் முகவர்கள் ஆகியோடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் "1986-ம் ஆண்டுக்கான வழங்குநர்களை பதிவு செய்தல்" எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு சீ-நோர் அபிவிருத்தி நிறுவனத்தின் பிரதி பொதுமுகாமையாளருக்கு 1986-01.10 திகதியில் அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்,

வழங்குநர்களைத் தெரிவு செய்யும் உரிமையை சீ-நோர் நிறுவனம் கொண்டுள்ளதுடன் அதனது தீர்மானம் இறுதியானதாகும். கூறுவிலைகளைக் குறித்ததன் பின்னர் வழங்கல் செய்யத் தவறும் அல்லது கட்டளையிட்டதன் பின்னர் அவற்றை உரிய காலத்தில் ஒப்படைக்கத் தவறும் வழங்குநர்கள் அறிவித்தலின்றி வழங்குநர்கள் பதிவேட்டிலிருந்து நீக்கப்படுவர்.

பின்வரும் தகவல்கள் உட்பட எல்லா விபரங்களையும் விண்ணப்பம் கொண்டிருத்தல் வேண்டும்:

1. வியாபார நிறுவனத்தின் பெயரும், முகவரியும்
2. தொலைபேசி இலக்கம் — தந்தி முகவரி
3, வியாபார நிறுவனத்தின் இயல்பு (தனி உரிமையாளர், பங்குடமை. பொறுப்பு, வரையறுக்கப்பட்ட கம்பனி ஆகியவற்றில் எது எனக் குறிப்பிடவும்)
4. பதிவு இலக்கம் (வியாபாரப் பெயர்கள் கட்டளைச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டிருப்பின்)
5. வங்கியாளர்கள் பெயர்கள்
6. விசாரிக்கக்கூடிய வழிகள் (ஏதாவது இருப்பின்)
7. கிடைக்கக்கூடிய கடன் வசதிகள்

எல்லா உரிய விபரங்களை அளிக்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்,

### பொருட்கள் வழங்கல்

1. எழுதுகருவிகள்
2. அலுவலக உபகரணம்
3. எல்லா வகையான அச்சடித்தலுக்குமான கடதாசிகளும், ஏனைய பொருட்களும்
4. அச்சுப்பாளம், இறப்பர் பொறிகள், பித்தளை அடையாளங்கள் முதலியன
5. மரம்
6. கட்டிடப் பொருட்கள்
7. கடின உலோகப் பொருட்கள்
8. குழாய்களும், வடிகால் உபகரணங்களும்
9. மின்சார உபகரணங்களும், உதிரிப்பாகங்களும்
10. இயந்திர சாதனங்கள், உபகரணங்கள், உதிரிப்பாகங்கள்
11. எல்லா வாகனங்களுக்குரிய உதிரிப்பாகங்கள்
12. ரயர்கள், ரியூப்கள், பற்றறிகள்
13. இரசாயனப் பொருட்கள்
14. சீருடைகள், சப்பாத்துக்கள், மழை அங்கிகள், பசைதடவி விறைப்பாக்கி, நெடுஞ்சப்பாத்துக்கள், குடைகள், தோற்பொருட்கன் ஆகிய சீருடைக்கான பொருட்கள்

### சேவைகள்

01. அச்சிடல்
02. அலுவலக உபகரணங்களைப் பழுது பார்த்தல்
03. சிவில் பொறியியல் பழுது பார்த்தல், நிர்மாணித்தல் உட்பட கட்டட வேலைகள் ஆகியன.
04. எல்லா வகையான வாகனங்களும் பழுது பார்த்தல்
05. கடைசல் வேலை
06. உலோக வார்ப்பு வேலை
07. எல்லா வகையான குளிர்சாதனப் பெட்டிகளையும், குளிரூட்டி இயந்திரங்களையும் பழுது பார்த்தல்,

பிரதிப் பொது முகாமையாளர்.

சீ-நோர் நிறுவனம், குருநகர், யாழ்ப்பாணம். (2488)

---

## "நகைப் பிரச்னைக்கு தீர்வுகாண முடியாத அரசு இனப்பிரச்னைக்கு தீர்வுகாணுமா?"

(யாழ்ப்பாணம்)

"தமிழ்ப் பிரதேசங்களில் நிலவுகின்ற நிச்சயமற்ற நிலையால் போதிய வருமானமின்றி மக்கள் வாடுகின்றனர். இந்நிலையில் பலர் உடைமகளையும் நகைகளையும் விற்றே காலத்தை ஓட்டுகின்றனர். ஆனுல் ஒருபகுதி மக்கள் தங்கள் நகைகளை மக்கள் வங்கிக் கிளைகளில் அடகு வைத்துவிட்டு அதற்குரிய பணத்தையும் செலுத்திய நிலையில் நகைகளை மீளப்பெறமுடியாது வாடுகின்றனர். அடகு வைத்த நகைகள் இருந்தால் அவற்றை விற்றுவது தங்கள் காலத்தைத் தள்ளலாமென்று அங்கலாய்க்கும் மக்களின் நகைகளை அரசாங்கம் இன்னும் முற்றுகத் திருப்பிக்கொடாதிருப்பது வேதனைக்கும் விசனத்துக்கும் உரியதாகும்" என்று தமிழர் கலாசாரச் சங்கத் தலைவர் எஸ்.கே. மகேந்திரன் நிதிய மைச்சர் திரு. ரொனி டி மெல்லுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அம் மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

"சாதாரண நகைப் பிரச்னையைத் தீர்க்கமுடியாத அரசு நாட்டின் இனப்பிரச்னையை எங்ஙனம் தீர்க்குமென்று நாம் எதிர்பார்க்கமுடியும்? இங்கிருந்து நகைகளை கொழும்புக்கு எப்படிப்பாதுகாப்பாக எடுத்துச்சென்றுர்களோ அதே முறையில் ஏன் திரும்பவும் அவற்றை இங்குகொண்டுவர முடியாது.

"சட்டரீதியான முறையில் அடைவாக எடுக்கப்பட்ட நகைகளை அரசு திருப்பிக் கொடுக்கத் தாமதிப்பது சட்டவிரோதமானதும் மனிதாபிமானதற்றதுமான செயலாகும். தனிப்பட்டவர்களிடம் நகைகளை அடகு வைக்காமல் அரசு நிறுவனத்தை மக்கள் நாடியது நம்பிக்கையான தா ப மெ ன் ப தா லே யே. எனவே அரசாங்கம் நம்பிக்கைத்துரோகியாக மாறுமல் மக்களின் நகைகளை இனி மேலும் தாமதிக்காது திருப்பிக்கொடுக்க ஆவன செய்ய வேண்டும்"

## "அயராது சேவையாற்றுகிறது யாழ். ஆஸ்பத்திரி"

[யாழ்ப்பாணம்]

பலவித இன்னல்களுக்கும் குறைபாடுகளுக்குமிடையே பொதுமக்களுக்கு அயராது சேவையை வழங்கிவருகிறது யாழ். பொது வைத்திசாலை என்று 'நோயாளர் நலன் புரிச்சங்கம்' விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

"யாழ் பொது வைத்திய சாலை எமது மக்களுக்காகவே இயங்கி வருகிறது. பலவித இன்னல்களுக்கும், குறைபாடுகளுக்கு மிடையேயும் இவ் வைத்தியசாலை தனது சேவைகளைப் பொதுமக்களுக்கு அயராது வழங்கிவருகிறது. எமது சேவைகள் இன்று பொதுமக்களுக்கு அதிகளவில் தேவைப்படுகிறது. ஆனுல் இத்தேவைகளை நிறைவேற்றுவதற்கு கிடைக்கின்ற வசதிகள் மிகவும் பற்றுக்குறையாக உள்ளது. எனவே எமக்காக இயங்கும் இவ்வைத்தியசாலையில்பொதுமக்களுக்கு மேலும் சிறந்த சேவைகளை வழங்குதற்காக கடந்த 5ம் திகதி நோயாளர் நலன்புரிச்சங்கம் என்ற ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இச்சங்கத்தின் பிரதான நோக்கம் பொதுமக்களாகிய நாம் எமது வைத்தியசாலைக்குத் தேவைப்படும் பலவித உதவிகளையும் இயன்ற முறையில் செய்து வைத்தியசாலையின் சேவைகளைச் சிறந்த முறையில் பெற்றுக் கொள்வதேஆகும்."

## யாழ். பல்கலைக்கழக பரிசுகள்

(யாழ்ப்பாணம்)

1984-ல் யாழ். பல்கலைக்கழகத்தின்மிகத்திறமையான விஞ்ஞான மாணவன் திரு. அஜீத் பிருந்தாபனுக்கு ஹன்டி பேரின்பநாயகம் ஞாபகார்த்தப்பரிசு ஆயிரம் ரூபாவும் அதே ஆண்டுக்கான புலமைப் பரிசுகளாக (Bursaries) பௌதீக விஞ்ஞானத்தில் திரு. அம்பிக்குமாருக்கும். உயிரியல் விஞ்ஞானத்தில் செல்வி. ரி, தில்லைநாதனுக்கும் தலா 2.500 ரூபா மீனுட்சி ஞாபகார்த்தப்பரிசும் வழங்கப்பட்டன.

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY


## 5 ஹெலிகொப்டர்.:.

[1ம் பக்கத் தொடர்ச்சி]
ஊயிட்டனர்.

அரியாலை- கண்டி வீதி- கொழும்புத்துறை- மந்நுங்குளம்- புங்கங்குளம் ரயில் நிலையம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய ஒரு பகுதியை இராணுவத்தினர் முற்றுகையிட்டனர். மற்றொரு பகுதியினர் இலந்தைக்குளம் வீதியூடாக கண்டி வீதி வரை செல்லும் வெள்ளவாய்க்காலால் சென்றனர். நாவற்குழி செல்லும் புகையிரதப்பாதை வழியாக வந்த இராணுவத்தினர் மாம்பழம் சந்திக்கருகாமையிலுள்ள ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய அருகாமையில் உள்ள வீட்டு வேலி ஓரங்களிலும் தென்னை மரங்களின் மறைவிலும் பதுங்கிக் கொண்டனர்,

அச் சந்தர்ப்பத்தில் கைக்குண்டு விசப்பட்டதைத் தொடர்ந்து மேலே வட்டமிட்ட ஹெலிகொப்டரிலிருந்தும் தரையிலிருந்தும் தொடக்சியாக துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன. ஆலய மடப்பள்ளியிலிருந்த பெண்ணும், வீட்டிலிருந்த இளம்பெண்ணும் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவத்தின்போது மகாமாரி அம்மன் கோவிலுக்கருகிலுள்ள தென்னை மரங்களுக்குள் பதுங்கியிருந்த இராணுவத்தினர் மத்தியில் துப்பாக்கிச்சூடுபட்டு சிலர் படுகாயமடைந்திருக்கலாம் அல்லது இறந்திருக்கலாம் எனவும் தெரிவிக்கிறது. நேற்றுப் பிற்பகல் அவ்விடத்தில் இரத்தக் கறைகள் காணப்பட்டன;

இச்சம்பவத்தின்போது கொழும்புத்துறை வீதியால் சென்றுகொண்டிருந்த மினிபஸ்ஸிலிருந்து பாய்ந்தோடிய சிலரும் காயமடைந்துள்ளனர்.

சுமார் நான்கு மணித்தியாலயங்கள் குறிப்பிட்ட பகுதிக்கும் யாழ். கோட்டைக்குமிடையே ஹெலிகொப்டர்கள் பறந்தவண்ணமிருந்தன.

(மா-ஐ)


## மரண அறிவித்தல்

### திரு. கந்தையா இராசதுரை

இளைப்பாறிய ஆசிரியர் இராசதுரை காலமாகிவிட்டார். இறுதிக் கிரியைகள் இன்று 21-12-85 கொடிகாமத்தில் நடைபெறும். உற்றார், உறவினர் தயவு செய்து இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். [2544]




## அந்தியேட்டி அழைப்பு

அமரர் சிவகுரு கைலாசபிள்ளை ஆசாரியார்

தோற்றம் : சுபகிருது 1901 ஆவணி 20ம் நாள்

மறைவு: குரோதன கார்த்திகை 22ம் நாள் 07-12-1985



9-12-1985ல் நடைபெற்ற அன்னாரது மரணச்சடங்கு நிகழ்ச்சிகளிற் கலந்துகொண்டு உதவிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கு எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்வதுடன் 22-12-85 ஞாயிறன்று [16ஆம் நாள் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்ச்சிகளிற் கலந்து சிறப்பிக்குமாறும் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

இங்ஙனம்,

அம்மன் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். [2543]

திருமதி கைலாசபிள்ளையும்,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகளும்.


## கலைப்பட்டதாரி ஆசிரியர் நியமனப் பட்டியல்

(கொழும்பு)

கலைப்பட்டதாரி ஆசிரியர் விபரம்,

பி. சூரியகாந்தன் (மண்டைதீவு), ஜி. பரமானந்தன் (வேலணை), பி. செல்வநிதிநாதன் (வேலணை), எஸ். கமலநாதன் (ஊர்காவற்றுறை), எஸ். யோகரத்தினம் (நிலாவெளி), ஈ. செல்வநாயகம் (அச்சுவேலி), கே. மூத்துலிங்கம் (சாவகச்சேரி) செல்வி பி. கதிரவேலு (மாவலை), செல்வி பீ. தேவநாயகி (மீசாலை) செல்வி ஆர். நடராசலிங்கம் (புலோலி) செல்வி எஸ், சின்னத்தம்பி [கோப்பாய்) செல்வி வீ. செல்லையா [கல்வியங்காடு) செல்வி பீ. யூ. கிறிஸ்ரையின் (பாஷையூர்) திரு. ஜே. ஜெயராஜ் (சுண்டிக்குளி) செல்விவீ. நல்லையா (தாவடி) செல்வி எஸ். உருத்திரகுமாரி (கோப்பாய்) வீ. நடராசா (மாதகல்) செல்வி பி. ஆர். ஆரோக்கியநாதன் [கொழும்பு] செல்வி ரீ. ரஜனி [புலோலி) செல்வி ஆர். பவளராணி (சாவகச்சேரி) செல்வி எம். எம். வேதநாயகம் (குருநகர்) செல்வி என். ரஞ்சினிதேவி [சாவகச்சேரி], செல்வி எஸ். கலாநிதி[மடத்தடி], செல்வி எம். ரீ. பஸ்தியாம்பிள்ளை [யாழ்ப்பாணம்], செல்வி ஏ. ஆர். ஜெயனகி [மல்லாகம்], செல்வி ஆர். கலாநிதி [நல்லூர்], செல்வி இ. புஷ்பராணி [இணுவில்], செல்வி எஸ். சாரதாம்பாள் [கரம்பன்] ஆர். சிவானந்தன் [திருநெல்வேலி], எஸ். விசுவலிங்கம் (சளுவாஞ்சிக்குடி], எஸ். அருள்ராசா (குருக்கள் மடம்), செல்வி எஸ். செல்வநாயகம், (மண்டூர்), செல்வி எஸ். பூபாலபிள்ளை (காத்தான்குடி), பீ, வன்னியசிங்கம் (குருக்கள் மடம்), செல்வி எஸ் சுப்பிரமணியம் (காத்தான்குடி), செல்வி எஸ். நாகமணி மட்டக்கப்பு), செல்வி எல். பீ. லம்பேர்ட் (கேசாலை). செல்வி எஸ். ரூசா டெல்லமாஸ்க்கிங்கி(டேசாலை). செல்வி எஸ். பிரேமராணி (முருங்கன்) செல்வி எம். அஞ்ஞலீற்று (மன்னார்), செல்வி ஏ. டபிள்யு. பி. கரீமா (காலி), செல்வி ஏ. எஸ். சற்முனவ்வரா (கல்முனை), எம். பத்மநாதன் (கல்முனை), திருமதி எச், யு. பாரூக் (சம்மாந்துறை), செல்வி எம் ஏ. சீ. சனூபா (சம்மாந்துறை செல்வி வீ. கலாபாகினி [அக்கைப்பற்று, செல்வி எஸ்.எஸ். மஜீதா (கல்முனை), செல்வி ஏ. எம். வஜீபா-[கல்லைத்தீவு], செல்வி ரீ. ஜொக்குமாரி (முல்லைத்தீவு), செல்வி வீ. ஜே. சீவரத்தினம் [முல்லைத்தீவு], எஸ். ரவீந்திரராசா [முல்லைத்தீவு], செல்வி பீ. சந்தியகுமாரி [வவனியா], செல்வி ஏ. தனபாக்கியம் [வவனியா], செல்வி எம். பத்மினிதேவி [தம்பலகாமம்], செல்வி கே. ரவிச்சந்திரிகா [திருகோணமலை], எம். எம். மொகமட் [ வியாங்கொடை], சகோதரி என். எம். கலிஸ்தோனன் [கிளிநொச்சி] செல்வி வீ. சிதம்பரப்பிள்ளை [கிளிநொச்சி], செல்வி பி. பொன்னம்பலம் [கிளிநொச்சி], எம். கே. எம். நிசார் விஜிதபுர], செல்வி கே. அம்பலவாணர் [தெஹிவளை], ஏ. எஸ். சந்திரடேஸ் [டிக்கோயா], செல்வி பி. தியாகராசா [புலோலி], செல்வி வீ. எஸ். சாலினி [உடுப்பிட்டி], செல்வி ரீ. தியகராசா [வவனியா], செல்வி சீ. கோணேஸ்வரி [தெல்லிப்பளை], செல்வி ரீ. சரோசமலர் [புலோலி], திருமதி ஜே. ஸ்ரீஸ்கந்தராசா [யாழ்ப்பாணம்], திருமதி ஜீ. சேதுராஜரா [கரவெட்டி], செல்வி கே. கணபதிப்பிள்ளை [பருத்தித்துறை], செல்வி ரீ செல்வராணி [கரவெட்டி], செல்வி சிதம்பரப்பிள்ளை[ கரவெட்டி], செல்வி எஸ். காளிராசா [கொடிகாமம்], செல்வி பீ. பவானி [சங்கானை], செல்வி பீ பிரேமகுமாரி [நீர்வேலி], செல்வி பீ. வரதராசா [நல்லூர்], திருமதி கே. ஈஸ்வரி [உடுப்பிட்டி], திருமதி பீ, முருகேசு [பருத்தித்துறை]. செல்வி ஜீ. சதாசிவம் [மானிப்பாய்], திருமதி கே. ஸ்ரீகதிர்காமநாதன் [மீசாலை], செல்வி எஸ். சந்தசாமி [அரியடி, யாழ்ப்பாணம்], செல்வி எஸ். தங்கேஸ்வரி [கரவெட்டி], செல்வி எஸ். சற்குணதிலகம் [அல்வாய்], திருமதி எம். எம். அருளம்பலம்[பருத்தித்துறை], செல்வி வீ. தஹா [யாழ்ப்பாணம்], செல்வி ஆர். எலிசபெத்ராம் [நல்லூர்], திருமதி ஆர். அருந்தவபாலன் (சாவகச்சேரி] செல்வி ரீ. சரோசமலர் [புலோலி], செல்வி கே. நடராசா [இணுவில்], செல்வி எச். எஸ். ஹேமநலின்ஸ் [சுன்னாகம்], செல்வி ஆர். இராமலிங்கம் [சுன்னாகம்], செல்வி எம். சிவபாக்கியம் [அரியாலை யாழ்ப்பாணம்], செல்வி பீ. கனகேஸ்வரி [அல்வாய்], வி. குணபாலசிங்கம் [அச்சுவேலி], எஸ். பிரணதார்த்திசர சர்மா [சுன்னாகம்], செல்வி வீ. தம்பிமுத்து [உடுவில்], திருமதி ஐ. பி. துரைராசா [யாழ்ப்பாணம்], செல்வி பி. நாகேஸ் [யாழ்ப்பாணம்], செல்வி ஜே. ஐ. ஸ்ரனிஸ்லோஸ் [இளவாலை], செல்வி எஸ். சுபோதநிதி [ஏழாலை], செல்வி ஜே. நாகலிங்கம் [சங்கானை],

செல்வி பீ. ஜே. ராஜசூரியர் (யாழ்ப்பாணம்), செல்வி. எஸ். பார்வதிதேவி (ஏழாலை), திருமதி கே. எம். ஹெலன் (சுன்னாகம்), செல்வி எம். ஏ. பெனிதா (பண்டத்தரிப்பு), செல்வி ரி. ஜெயாஞ்சிதம் (வரணி), எஸ். திரவியம் (தெல்லிப்பளை), செல்வி கே. கந்தசாமி (தெல்லிப்பளை), செல்வி எம். செல்லையா [இளவாலை], செல்வி ரி. கந்தர் [கைதடி], செல்வி வீ. சர்வாப்பிகை [தெல்லிப்பளை], செல்வி எஸ். செல்லையா [கரவெட்டி], செல்வி கே. சனகசபை [கரவெட்டி], செல்வி எம். முத்தையா [மட்டுவில்],

[6-ம் பக்கமும் பார்க்க]

[தொடரும்]

## ஏகாதசி மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோவில் ஸ்ரீவைகுண்ட ஏகாதசி மகோற்சவம் நாளை ஞாயிறு காலை 4 மணிக்கு ஆரம்பமாகும். தொடர்ந்து மறுநாட்காலைவரை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

## இன்று

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழக சிறுவர் பாடசாலையின் முதலாவது ஆண்டு நிறைவு விழா இன்று மாலை கழக முன்றலில் நடைபெறவுள்ளது. விழாவின் சிறப்பு நிகழ்ச்சியாக கவிஞர் புதுவை இரத்தினதுரையின் தலைமையில் நடைபெறும் ''நல்ல நல்ல பிள்ளைகளை தம்பி'' என்ற தலைப்பிலான கவியரங்கு இடம் பெறவுள்ளது,

## சஞ்சிகை வெளியீடு: ஒளி விழா

(யாழ்ப்பாணம்)

'நான்' பத்திரிகையின் பன்னிரண்டாவது ஆண்டு மலர் வெளியீட்டு விழாவும், கிறிஸ்மஸ் ஒளி விழாவும் இன்று சனிக்கிழமை யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி மண்டபத்தில் அருட்திரு. ஜெபநேசன் யாழ். பேராலய பங்குத்தந்தை தலைமையில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடாதிபதி பேராசிரியர் சி. சிவஞானசுந்தரம் (நந்தி) ஆய்வுரை நிகழ்த்துவார். விமர்சன உரையை பேராசிரியர் கு. நேசையா நிகழ்த்துவார். நத்தார் நற்செய்தியை வண. ஜெ. சர்வானந்தா கூறுவார்.

செல்வி ஐரீனின் தீப நடனத்துடன் ஜீவஜலம், புதிய பயணம், ஊமையின் கனவுகள் போன்ற நாடகங்களும் இடம் பெறும். (ஐ)


இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B10036/81. Eelanadu P. O. Box: 49, Telegram, Eelanadu, Telephone: 22389-24126.



## கிறிஸ்தவ இறையியல் பட்டதாரி வகுப்புக்கள்

செரம்பூர் சர்வகலாசாலை B. Th. [Bachelor of Theology], B. D. [Bachelor of Divinity] வகுப்புகளுக்கான விரிவுரைகள்.

1987 ஆனி மாதம் கிறிஸ்தவசேவ ஆச்சிரமத்தில் ஆரம்பமாகும்.

**பெப்ரவரி 1987இல் நடைபெறும் பிரவேசப் பரீட்சைக்குரிய ஆயத்த வகுப்புகள் 1986 பங்குனி 1-ம் திகதி ஆரம்பமாகும்.**

குறைந்தபட்சம் G. C. E. (O/L) சித்தியடைந்த கிறிஸ்தவர்கள் முழுநேர மாணவர்களாக பயிற்சி நெறியை பின்பற்றுவதற்கு விண்ணப்பிக்கலாம்.

மேற்படி பயிற்சி நெறியில் அனுமதிக்கப்படுவோருக்கு உதவிப்பணம் (Scholarships) கொடுக்கப்படும்.

திருப்திகரமாக பயிற்சி வகுப்புகளை முடித்து வெளியேறுவோருக்கு தென் இந்திய திருச்சபை யாழ்ப்பாண ஆதீனத்தில் முழுநேர ஊழியர்களாக பங்குபெற வாய்ப்புண்டு.

முழுவிபரங்களுக்கும்
உங்கள் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய

**கடைசித் திகதி: ஜனவரி 31, 1986**

முகவரி:

பதிவாளர்,
பொதுநிலையாளர் - நற்தூதுப்பணி,
பயிற்சி நிலையம்,
மே/பா, கிறிஸ்தவ சேவ ஆச்சிரமம்,
மருதனமடம், சுன்னாகம். (2430)